Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 217 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 17, திங்கள் 01.07.2013

இந்தியா

பக். 03
தமிழர் பிரச்சினையை கருணாநிதி மறக்கவில்லையாம்

உலகம்

பக். 07
500 ஆண்டுகளுக்குப் பின் மீட்கப்பட்ட சிறுமி

விளையாட்டு

பக். 22
வலைப்பந்தில் இரண்டாமிடம்

# வடமாகாணத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டி

## கண்டியில் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
அரசுடன் இணைந்திருந்தாலும் கட்சியின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப்போட்டியிட உள்ளது.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் அதனை அறிவித்துள்ளார்.
கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதன்போது ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:



> "தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஏனைய கட்சிகளைப் போலவே எமது கட்சிக்கும் உரிமை உண்டு.

தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதற்கும், வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கும் ஏனைய கட்சிகளைப் போலவே எமது கட்சிக்கும் உரிமை உண்டு.
இந்த வகையில் விரைவில் நடைபெறவுள்ள வடக்குத் தேர்தலில் அரசோடு நாங்கள் இணைந்திருந்தாலும் தனித்துப் போட்டியிடுவதென முடிவு செய்துள்ளோம். எனினும் சூழ்நிலைகளுக்கு அமைவாக சில வேளைகளில் இந்த முடிவில் மாற்றம் ஏற்படவும் செய்யலாம்.
ஏனெனில் சிலர் தமது சுயலாபங்களுக்காக முஸ்லிம் காங்கிரஸை அரசிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறார்கள். அவர்களுக்கு நாம் தீனிபோட முடியாது.
அவ்வாறு அவர்கள் நினைத்தபடி முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறினால் அது இடுப்பில் உள்ள துண்டைக் கழற்றி தலைப்பாகைகட்டுவதற்குஒப்பானது. நாம் எமது கட்சியிலுள்ள அங்கத்தவர்களையும் கட்சியின் மானத்தையும் பாதுகாப்பதே முதன்மையானது. முஸ்லிம் நாடுகளின் ஒன்றியத் தூதர்கள் கூட்டத்தில் நான் மௌனமாக இருந்ததாகப் பலர் விமர்சிக்கின்றனர். முன்யோசனை எதுவும் இன்றி பேசுவதன் மூலம் எமது இனத்தையும் நாட்டையும் காட்டிக்கொடுக்க நான் விரும்பவில்லை." - என்றார். (ங-ரி)

## பயிற்சி முகாம் பறித்தது அதிபர் உயிரை

கொழும்பு, ஜூலை 1
சீதுவ பிரதேச பாடசாலை அதிபரொருவர் ரன்தெம்பே மாணவர் படையணியின் பயிற்சி முகாமில் உயிரிழந்துள்ளார் என ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.
52 வயதான இவர், நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.
உடற்தகுதி பயிற்சி செயலமர்வில் கலந்துகொண்டிருந்தபோதே குறித்த அதிபர் உயிரிழந்தார் என்றும் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## விடுதலை வேண்டுமா குதியுங்கள் தேர்தலில்

### அரசியல் கைதிகளுக்கு காட்டப்படுகிறது ஆசை

யாழ்ப்பாணம், ஜூலை 01
"வடமாகாண தேர்தலில் சுயேச்சைக்குழுவாக நின்று ஆதரவு வழங்கினால் உங்களை விடுதலை செய்வோம்" என சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் சிலரிடம் அதிகாரிகள் சிலர் ஆசை காட்டி பேச்சு நடத்தி வருகின்றனர் என நம்பகமாகத் தெரியவருகிறது.
கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னர் பொதுப் பணிகளில் ஈடுபட்டவர்களிடமே இந்த ஆதரவை தேடி வருகின்றது. குறிப்பாக கைதிகளாகவுள்ள ஆசிரியர்

தொடர்ச்சி: பக்கம் 21

## சந்திரிகா மீது ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, ஜூலை 1
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க செயலாற்றி வருகிறார். என்பதால் அவருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று விசாரணையொன்றை நடத்த வேண்டும் - என்று அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அரசமைப்பின் '13' ஆவது திருத்தம் சம்பந்தமாக சுதந்திரக் கட்சியானது தனது நிலைப்பாட்டைப் பகிரங்கப் படுத்தியுள்ளது. இந்த நிலையில் கட்சியின் ஆலோசகரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கட்சியின் நிலைப்பாட்டுக்கு முரணாக கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். எனவே இது தொடர்பான அவரது கருத்து வெளிப்பாடுகளை அவதானிப்பதற்கென விசேட அமைச்சர் குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அத்துடன் கட்சியில் பிளவை ஏற்படுத்த சந்திரிகா முனைந்து வருகிறார். கட்சி உறுப்பினர்களை இரகசியமாக சந்தித்து தனக்குச் சார்பாக அணி திரட்டத் தொடங்கியுள்ளார். எனவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்று உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் இந்த அமைச்சர்கள் கோரியுள்ளனர். (ங-22)

## '13' ஐ இல்லாதொழிக்கக் கோரும் சட்ட வரைவு இன்று விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 1
அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கக் கோரும் சட்ட வரைவு மீதான வழக்கு இன்று மு.ப. 10 மணிக்கு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.
அரசமைப்பில் திருத்தங்களை கோரும் தனிநபர் சட்டவரைவை ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளர் அத்துரலிய ரத்தன தேரர் கடந்த 18 ஆம் திகதி முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.
இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட சட்டவரைவு அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ளது என சுட்டிக்காட்டி மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவே இன்று உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்

தொடர்ச்சி: பக்கம் 21

## பாதுகாப்புப் பேரவையிலும் அமைச்சர்கள் போர்க்கொடி

### மாகாண அதிகாரக் குறைப்புக்கு எதிராக வாசு, டியூ அதிரடி


டியூ


வாசு

கொழும்பு, ஜூலை 1
13ஆவது திருத்தத்திலிருந்து பொலிஸ், காணி அதிகாரங்களை ஒழிப்பதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள இடதுசாரி அமைச்சர்கள், தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்திலும் இது விடயம் சம்பந்தமாகக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
அண்மையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்படப் பாதுகாப்புத்துறையின் உயர் மட்டப்பிரமுகர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.
பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்துக்கு அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. எனினும், வழமைக்கு மாறான வகையில் குறித்த கூட்டத்தில் அமைச்சர்களான டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.
இதன்போது மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்வதால் ஏற்படும் பாதக நிலைமைகள் குறித்து மேற்படி இரு அமைச்சர்களுக்கும் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் விசேட விளக்கமொன்றை அளித்துள்ளார்.
இதன் பின்னர் அமைச்சர்கள் இருவரும் பொலிஸ் மா அதிபர் கூறிய விடயங்கள் முற்றிலும் தவறானவை என்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து சர்வகட்சிக்குழு தமது அறிக்கையில் சிறந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டி ஜனாதிபதி முன்னிலையிலேயே வாதிட்டுள்ளனர். (ங-சி)

## அமெரிக்க பதில் உதவி சட்டமா அதிபராக வடமராட்சிப் பெண்



கொழும்பு, ஜூலை 1
அமெரிக்காவில் புதிய பதில் உதவி சட்டமா அதிபராக யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த மைதிலி ராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.
அமெரிக்க நீதித்துறைத் திணைக்களத்தில் மைதிரி ராமன் குற்றப்பிரிவு பதில் உதவி சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் Yale பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதுடன், சிகாகோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றவர்.
குற்றவியல் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்கும் மைதிலி ராமன், அமெரிக்கா முழுவதிலும் உள்ள சமஷ்டி குற்றவியல் வழக்குகளை கையாளும் சுமார் 600 அரச சட்டவாளர்களுக்குத் தலைமை தாங்கவுள்ளதுடன், குற்றவியல் சட்டங்களை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருப்பார்.
அத்துடன் அந்தந்த மாவட்

தொடர்ச்சி: பக்கம் 21



ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பதினெட்டாவது வருடாந்த மாநாட்டின் போது மூத்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவ்வேளை ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் உதயன் நாளேட்டின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.
விழாவின் பிரதம விருந்தினரான சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ விருது வழங்கிக் கௌரவிப்பதனையும், நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோர் அருகில் நிற்பதனையும் படத்தில் காணலாம்.
முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளர் எம்.ஏ.எம். நிலாம் தலைவர் அல்ஹாஜ் என்.எம். அமீன், பிரபல வர்த்தகர் எஸ்.எஸ். இப்ராஹிம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## கூட்டமைப்போடு ஹெலஉறுமய பேசும்

அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் ஆகியவற்றுடனும் பேச்சு நடத்துவதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.
இந்தத் தகவலை ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க நேற்று உறுதிப்படுத்தினார்.
அதேவேளை, அரசின் பங்காளிகளான முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடனும் ஹெல உறுமய விரைவில் பேச்சு நடத்தவுள்ளது.
அரசமைப்பில் மாற்றத்தை வலியுறுத்தி 21 ஆவது திருத்தச் சட்டமாக ஹெல உறுமய கொண்டுவந்துள்ள சட்ட வரைவு சம்பந்தமாக அக்கட்சி சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.
இதன்பிரகாரமே மேற்படிதரப்புகளுடனும் ஹெல உறுமய பேச்சுநடத்த உத்தேசித்துள்ளது.

## ஆஸிக்குச் செல்ல முயன்றோர் கைது

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் விடுதி ஒன்றில் வைத்து ஆஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐந்து குடும்பங்களின் உறுப்பினர்களை காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கிரான்குளத்திலுள்ள விடுதி ஒன்றில் வைத்து இரு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை உட்பட ஆண்கள் மற்றும் பெண்கள் என ஐந்து குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் தற்போது காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் முன்னிலைபடுத்துவதற்கான நடவடிக்கைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடிப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (ங-சி)

# மாகாணத் தேர்தல்களில் கூட்டாக களமிறங்கும் மலையகக் கட்சிகள்

## புதிய கூட்டணிகளுக்கான பேச்சுகள் தீவிரம்

கொழும்பு, ஜூலை 1
மத்திய மாகாணசபை விரைவில் கலைக்கப்பட்டு செப்ரெம்பரில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதில் கூட்டாகக் களமிறங்குவது குறித்து மலையகத் தமிழ்க் கட்சிகள் தற்போது தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றன என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.
இதன்படி தேர்தலையொட்டி உதயமாகும் என எதிர்பார்க்கப்படும் மலையகத் தமிழ்க் கூட்டமைப்பில், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், மலையக இடதுசாரி முன்னணி ஆகியன அங்கம் வகிக்கும் எனவும் தெரியவருகின்றது.
அத்துடன், ஜே.ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணியும் இந்தக் கூட்டணியில் இணையும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.
குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதற்கு உத்தேசித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மலையகத் தமிழ்க் கூட்டமைப்பில் களமிறங்குவதற்கும் சாத்தியங்கள் உள்ளன.
இவ்விவகாரம் சம்பந்தமாக மலையகப் புத்திஜீவிகள் சிலர் விரைவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடத்துடன் கலந்துரையாடவுள்ளனர் என்று அறியமுடிகின்றது.
அதேவேளை, மலையக கூட்டமைப்புக்கு, மலையகத்திலுள்ள இதர சிறுகட்சிகளினதும் அமைப்புகளையும் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் எதிர்காலத்தில் பேச்சுகள் இடம்பெறவுள்ளன. இதற்காக விசேட குழுவொன்றை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சிலவேளைகளில், இந்தக் கூட்டமைப்பு முயற்சிக்கு இ.தொ.கா. பச்சைக்கொடி காட்ட மறுக்கும் பட்சத்தில், ஏனையக் கட்சிகள் பொது இணக்கபாட்டுடன் தேர்தல் களத்தில் குதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இதன்பிரகாரம், நுவரெலியா மாவட்டத்தில் மலையகக் கூட்டமைப்பை, மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்திலும், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணி சின்னத்திலும் களமிறக்குவதற்குத் திட்டமொன்று இருந்தாலும் அது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.
நுவரெலியா மாவட்டத்தில் தனித்துக் களமிறங்கும் நிலைப்பாட்டில் மலையக மக்கள் முன்னணி உட்பட சில கட்சிகள் உறுதியாக இருப்பதால், கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கே பெரும்பாலும் இந்தக் கூட்டமைப்பு பொறிமுறை பொருந்தும் எனவும் கருத்துகள் நிலவுகின்றன.
ஏனெனில், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் தமிழ்க் கட்சிகள் தனித்தனியே களமிறங்கும் பட்சத்தில் தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் இழக்க நேரிடும். இதனால் இவ்விரு மாவட்டங்களுக்கும் கூட்டணி பொறிமுறையே பொருந்தும் என்பது அநேகமானோரின் கருத்து.
குறிப்பாக கண்டி மாவட்டத்தில் தற்போது ஒரேயொரு தமிழ் உறுப்பினர்தான் மாகாணசபை உறுப்பினராக இருக்கின்றார். மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இல்லை. எனவே, இவ்விரு கூட்டாக களமிறங்கினால்தான் தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருக்கின்றது.
ஆகவே, மலையக தமிழ்க் கட்சிகள் இது விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும் என மலையக புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன், சப்ரகமுவ மாகாணத்தில் ஒற்றுமையுடன் களமிறங்கியதால் இரண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை பெறமுடிந்த விடயத்தையும் அவர்கள் இதற்கு உதாரணமாக எடுத்துரைக்கின்றனர்.
அதேவேளை, மலையக கூட்டணி விடயம் சம்பந்தமாக 'உதயன்' மலையக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் வினவியபோது, சிலர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டாலும், சிலர் கட்சியின் உயர்பீடம் கலந்துரையாடியே இறுதி முடிவெடுக்கும். அதன் பின்னரே அறிவிப்பொன்றை விடுக்கலாம் என தெரிவித்தனர்.
எது எப்படியிருந்தபோதும், மத்திய மாகாண சபைத் தேர்தல் திகதி அரசால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிரிட்டன் விஸாவுக்குப் பிணை இலங்கை கடும் எதிர்ப்பு


கொழும்பு, ஜூலை 1
ஆபிரிக்க-ஆசிய நாடுகளைச் சேர்ந்த உயர் ஆபத்தைக் கொண்ட ஆறு நாடுகளில் இருந்து பிரிட்டனுக்குப் பயணம் செய்வோர் நுழைவிசைவு (விஸா) பெற, 3000 பவுண்ஸை பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும் என்ற அந்த நாட்டின் பரிந்துரைக்கு இலங்கை கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.
பிரிட்டனின் இந்தத் தீர்மானம் தொடர்பில் இலங்கை அதிருப்தி அடைந்துள்ளது என பிரிட்டன் உயர் ஆணையாளர் ஜோன் றன்கின்னிடம் இலங்கை வெளியுறவு அமைச்சரின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரியப்படுத்தியுள்ளார்.
இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நைஜீரியா மற்றும் கானா ஆகிய ஆறு நாடுகளிலிருந்து பயணம் செய்வோர், இவ்வாண்டு நவம்பர் முதல் தமது குறுகிய கால நுழைவிசைவைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும்போது 3000 பவுண்ஸை பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும் என்கின்ற தனது மாதிரித் திட்டம் தொடர்பாக பிரிட்டன் உள்துறைச் செயலகம் இவ்வார ஆரம்பத்தில் அறிவித்திருந்தது.
இந்தச் சட்டம் மூலம் பெரும்பாலான நுழைவிசைவு விண்ணப்பதாரிகள் பாதிக்கப்படமாட்டார்கள் எனவும் இதனால் இவர்களது பிணைப்பணம் மீளவழங்கப்பட முடியும் எனவும் பிரிட்டன் உயர் ஆணையாளர் உறுதி வழங்கினார் எனவும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
பிரிட்டன் நுழைவிசைவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டு தோறும் 30,000 - 35,000 வரையான இலங்கையர்கள் விண்ணப்பிப்பதாகவும், இவர்களில் மாணவர்களே அதிகமாக உள்ளதாகவும் கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் அண்மையில் தெரிவித்திருந்தது. (ங-சி)

# வடக்குத் தேர்தலை தடுக்க உயர் நீதிமன்றத்தில் மனு

## அரச உயர்மட்டம் கூடி ஆராய்வு

கொழும்பு, ஜூலை 1
நீதிமன்ற நடவடிக்கை மூலமாக வடமாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசு திட்டமிட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதன்படி அரசமைப்பின் 13 வது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் முறைமை என்பவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளாது, வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுமானால் அதன் மூலம் தென்பகுதி மக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் எனக் குறிப்பிடப்படும் மனுவொன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதே அரசின் நோக்கமாக உள்ளது எனத் தெரிய வருகிறது.
இதற்கென அரசின் உயர் மட்டக் குழு ஒன்று தமது நவடிக்கைகள் குறித்து சந்தித்துப் பேசியுள்ளதாகவும் அத்தகைய மனுவொன்று சமர்ப்பிக்கப்படுவதாயின் அது பலம் பொருந்தியதொன்றாக அமைய வேண்டும் எனவும் அந்தக் குழுவினர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் மனு வலிதானதாக அமைவதற்கென சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.
இதன்பொருட்டு மூத்த சட்டத்தரணிகள் ஐவர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
குறித்த மனு தயாரிக்கப்பட்டு உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதன் விசாரணைகள் முடியும் வரை வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்குத் தடை விதிக்குமாறும் உயர்நீதிமன்றத்திடம் மனுதாரர் சார்பாகக் கோரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-22)

## அவயவங்களை இழந்தோருக்கான நடமாடும் சேவை மன்னாரில்



யாழ்ப்பாணம், ஜூலை 1

மன்னார் மெத்தா பவுண்டேசன் நிறுவனத்தால் செயற்கை அவயவங்களை இழந்தவர்களுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 5 ஆம் திகதி மாங்குளம் தமிழ் மகா வித்தியாலயத்திலும் எதிர்வரும் 6 ஆம், 7ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மணற்குடியிருப்பு மீனவர் அபிவிருத்திக் கட்டடத்திலும் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்பட செயற்கை அவயவங்களை இழந்தவர்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி பயன்பெறலாம். இந்த நடமாடும் சேவையின் போது மருத்துவர் ஒருவரது பரிசோதனைக்குப் பின்னர் சார்பு உறுப்புகளை உடனடியாகப் பொருத்த முடியும் எனில் உடனடியாகவும் உறுப்புக்கள் தேவைப் படுவோருக்கு அதற்கான அளவுகளும் எடுக்கப்படுவதுடன் செயற்கை அவயவங்களுக்கான திருத்தப் பணிகளும் மேற் கொள்ளப்படவுள்ளன. (வ-14)

# புனரமைக்கப்படாத நிலையில் பளை பொதுச் சந்தைக் கட்டடம்

## மீள்குடியமர்ந்த வர்த்தகர்கள் விசனம்

பளை, ஜூலை 1

மீளக்குடியமர்வு இடம்பெற்று 3 வருடங்கள் கடந்த நிலையில் போரினால் அழிவடைந்த பளை பொதுச் சந்தையில் உள்ள கடைகள் மீளக் கட்டப்படாத நிலையில் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பளைப் பிரதேச சபையால் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட 7 கடை அறைத் தொகுதியைக் கொண்ட மாடிக் கட்டடம் போர் இடம் பெற்ற வேளையில் முற்றாக அழிவடைந்துள்ளது.

குறித்த 7 கடைகளும் கேள்விகள் மூலம் வழங்கப்பட்டு வியாபார நிலையங்களாக மாற்றப்பட்டு இயங்கி வந்தன. 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வு வேளையிலும் 2003 ஆம் ஆண்டு மீளக் குடியமர்வுக்குச் சென்ற வேளையிலும் முற்றாகச் சேதமடைந்த நிலையில்காணப்பட்டன.

அதனையடுத்து இடம்பெற்ற வன்னி இடப்பெயர்வின் பின்னர் பளைப் பிரதேசத்துக்கு மீள் குடியமர்வு இடம்பெற்று மூன்று வருடங்களாகியும் கடைத்தொகுதியை மீள நிர்மாணிப்பதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக பிரதேச சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டால், கட்டடம் விரைவில் அமைத்துத் தருவதாக கூறுகிறார்களே தவிர இதுவரை கட்டட வேலைகள் ஆரம்பிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும்கடந்த மூன்று வருடங்களாக மேற்கொள்ளாத நிலையில் உள்ளது. இதனால் கடைத்தொகுதி களை



பளைப் பிரதேச சபையால் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட 7 கடை அறைத் தொகுதியைக் கொண்ட மாடிக் கட்டடம் போர் இடம் பெற்ற வேளையில் முற்றாக அழிவடைந்துள்ளது.

கேள்வி மூலம் குத்தகைக்குப் பெற்ற தாங்கள் தொழிலைத் தொடங்க முடியாமல் உள்ளதால் பொதுச் சந்தை வளாகத்தில் தற்காலிக கடைத்தொகுதி அமைத்துத் தருமாறு கோரியும் அது தொடர்பில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்தனர். (வ-9)

## பனைசார் உற்பத்திப் பொருள்களின் சந்தை வாய்ப்புக்கு மத்திய நிலையம்

### விரைவில் பம்பலப்பிட்டியில்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பனைசார் உற்பத்தியாளர்களை ஏனைய மாகாணங்களுடன் இணைத்து சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக விசேட மத்திய நிலையம் ஒன்று கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைக்கப்படவுள்ளது.

பனைசார் உற்பத்தியாளர்களையும், ஏற்றுமதியாளர்களையும் இணைக்கும் மத்திய நிலையமாக இது செயற்படவுள்ளது. பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களை விட ஏனைய தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் அதிகளவு கிராக்கி உள்ள நிலையில் உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் தொடர்பில்லாத காரணத்தால் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புத் தவறவிடப்படுகிறது.

பனைசார் உற்பத்தியாளர்களையும், ஏற்றுமதியாளர்களையும் இணைக்கும் மத்திய நிலையமாக இது செயற்பட வுள்ளது.

இதற்கமைவாக உற்பத்தியாளர்களையும், ஏற்றுமதியாளர்களையும் ஒன்றிணைக்கும் கேந்திர நிலையமாக இது செயற்படவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் ஊடாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்படுள்ளது. (வ-14)

## அச்சுதன் குளத்தை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

பருவமழைக்கு முன்னதாக யாழ்.வண்ணார்பண்ணை அச்சுதன்குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

யாழ்.வண்ணார்பண்ணை பத்திரகாளி ஆலய வீதியில் அமைந்துள்ள அச்சுதன்குளம் சேதமடைந்திருப்பதுடன் அருகில் இருக்கும் குடியிருப்பாளர்களும் மழைகாலத்தில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக பருவகாலத்துக்கு முன்பாகக் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.வண்ணார் பண்ணை பத்திரகாளி ஆலய வீதியில் அமைந்துள்ள அச்சுதன் குளம் சேதமடைந்திருப்பதுடன் அருகில் இருக்கும் குடியிருப்பாளர்களும் மழை காலத்தில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இதற்கான பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-14)

## பச்சிலைப்பள்ளி அ.சங்கத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பும்



தென்மராட்சி, ஜூலை 1

பளை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாம் வருட பூர்த்தி விழா நேற்று முன்தினம் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பளை மத்திய கல்லூரியில் கடந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப் பட்ட 21 மாணவர்கள் பதக் கங்கள் சூட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

மேலும் பளைப் பிரதேசத் தில் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயற்படும் பிரதேசத்தைச் சேர்ந்த 7 அதிபர்களும் நிகழ்வில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் பளைப் பிரதேச பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 101 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட இலவச கணினிப் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சியினைப் பூர்த்தி செய்த 71 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-9)

## வறிய புற்று நோயாளர் 100 பேருக்கு உடுபுடவை உலர் உணவுப் பொதி



யாழ்ப்பாணம், ஜூலை 1

சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்களால் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் தடுப்புச் சங்கத்தால் 100 பெண் பயனாளிகளுக்கு உடுபுடைவைகள் மற்றும் 1,300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

யாழ்.வேம்படி வீதி, றிம்மர் மண்டபத்தில் இயங்கும் வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் தடுப்புச் சங்கப் பணிமனையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சுவிஸில் வசிக்கும் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் அவருடன் சேர்ந்த நலன் விரும்பிகள் சேகரித்த நிதியிலேயே மேற்படி அன்பளிப்பு வழங்கப்பட்டது. (ஒ-14)

## ‘லஞ்சீற்’ றுக்குப் பதிலாக இலைகளைப் பயன்படுத்துக


### நல்லூர் உற்சவ ஆலோசனைக் கூட்டத்தில் மாநகர சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 1

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ள உணவகங்கள் லஞ்சீற்றுக்குப் பதிலாக இலைகளைப் பாவிக்க வேண்டும் என யாழ்.மாநகர சபையில் உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பான கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அன்னதான மண்டபங்கள் இலைகளைப் பயன்படுத்துகின்றன. எனவே இலைகளுக்குப் பற்றாக்குறை ஏற்படலாம் என்று சொல்வதற்கில்லை. ஆலயச் சூழலில் பொலித்தீன்கள் பயன்படுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் கொத்து ரொட்டி தயாரிப்பவர்கள் அதன் சத்தத்தை குறைக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இம்முறை ஆலய உட்புறத்தில் பொலிஸார் அதிகமானோர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். தீர்த்த உற்சவத்தின் போதும் அது நடைமுறைப்படுத்தப்படும். பொது மக்களுக்கு சிறந்த முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமையும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். ஆலய உட்புறத்தில் கூடுதல் பொலிஸாரைக் கடமையில் அமர்த்த வேண்டும் என அறங்காவல் சபைப் பிரதிநிதி கேட்டிருந்தார்.



கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குறைபாடுகள் யாவையும் இம்முறை நிவர்த்தி செய்யப்பட்டு உற்சவம் சிறப்பு இடம்பெற பொது மக்களும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு முதல்வர் கேட்டுக் கொண்டார்.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை யாழ்.மாநகரசபை மண்டபத்தில் உற்சவ கால ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகர முதல்வர், ஆணையாளர் உட்பட திணைக்கள உத்தியோகத்தர்கள், தனியார் போக்குவரத்துச் சேவைப் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆலய அறங்காவல் சபை உறுப்பினர்கள், தொண்டர் அமைப்புக்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (வ-7)

## ஓட்டோ தடம்புரண்டதில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 1

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ தடம்புரண்டதில் அதில் பயணித்தவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் விஸ்வமடு குமாரசாமி புரத்தைச் சேர்ந்த அழகராசா மயூரன் (வயது-16) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, புனர்வாழ்வளிக்கப்பட்டு வீடு திரும்பிய மகன் தாக்கியதில் கண்ணில் காய மடைந்த தந்தையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு சேர்க்கப்பட்டார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் சத்திர சிகிச்சை செய்யப்பட்ட கண் மீது தாக்கியதாக கூறப்பட்டது. (வ-9)

### லண்டனில் இயங்கி வரும்

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு பாராட்டு

கொடிகாமம், ஜூலை 1

புலம்பெயர்ந்த நாடுகளில் தங் கியுள்ள எமது உறவுகள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகி உள்ளனர். மக்களின் துயர் துடைக்கவென உருவாக்கப்பட்ட லண்டனில் இயங்கும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் சிறந்த முறையில் செயற்படுவது பாராட்டுதற்குரியது. இந்த அமைப்பானது இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அர்ப்பணிப்பான சேவை மனப்பான்மை கொண்ட 20 பேரைச் செயற்பட வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. இதுவொரு போற்றத்தக்க செயற்பாடாகக் காணப்படுகிறது. இந்த அமைப்பானது மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகளை உணர்ந்து பல்வேறு வாழ்வாதார உதவிகளை வழங்குவ தால் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய பெரிதும் உதவு கின்றது. வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சீருடைகள் வழங்கப்படுவதுடன் அவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்கான உதவிகளையும் வழங்கி வருகின்றது. இவற்றுக்கு மேலாக பளைப் பிரதேசத்தில் இயங்கும் அனைத்து முன்பள்ளிகளிலும் கல்வி பயிலும் சுமார் 800 சிறார்களுக்கு சத்துணவுகளைத் தினமும் வழங்கி வருகின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர் கௌரவிப்பு, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பு, மாண வர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி ஆகிய செயற்பாடுகளில் இந்த அமைப்பினர் ஈடுபட்டுள்ளமை பெரிதும் பாராட்டுதற்குரியது என்றார். (க-9)

## வாகனங்களுக்கு இனி இலச்சினை கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 01

வட மாகாண சபைக்குட்பட்ட அமைச்சர்கள், திணைக்களங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் அரச வாகனங்களில் இனி அரச இலச்சினையை பொறிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி சுற்றறிக்கை மூலம் இதனை அறிவித் துள்ளார்.

இதுவரை காலமும் அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்கப்படாது இருந்தன. இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே அனைத்து வாகனங்களுக்கும் இலச்சினை பொறிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-288)

## கிராம வங்கியில் வைப்பிலிட்ட பணத்தை திரும்பப் பெற முடியாது திணறும் மக்கள்

### போர் வேளையில் ஆவணங்கள் அழிந்ததால்

பளை, ஜூலை 1

பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் பணம் வைப்பிலிட்ட பளைப் பிரதேச மக்கள் வைப்பிலிட்ட பணத்தை மீளப்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பளையில் அரச, தனியார் வங்கிகள் எதுவும் செயற்படாத காலத்தில் (1990 இற்கு முன்னர்) அங்கு இயங்கிய கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்குகளை பிரதேச மக்களும் பிரதேசத்தில் இயங்கிய பொது அமைப்புகளும் ஆரம்பித்துச் செயற்பட்டனர். 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின்போது பிரதேச மக்களும் பொது அமைப்புக்களும் தமது வங்கிக் கணக்குப் புத்தகங்களை கைவிட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டது.

போர் வேளையில் கிராமிய வங்கியும் தனது சகல உடைமைகளையும் ஆவணங்களையும் இழந்தது. வாடிக்கையாளர்களிடம் ஆவணங்கள் இல்லாதாலும் வங்கியில் அது தொடர்பான ஆவணங்கள் இல்லாததாலும் வைப்பிலிட்ட தொகையை பெற முடியாது வாடிக்கையாளர்கள் தவிக்கின்றனர்.

இதேவேளை பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் சில பிரிவுகள் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாததால் அங்குள்ள மக்களால் வைப்பிலிடப்பட்ட தொகையை எவ்விதம் மீளப் பெறுவது என்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வங்கியில் 'பாஸ்' புத்தகத்தை தொலைத்த வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் சென்றால் தமது ஆவணங்களும் அழிவடைந்து விட்டதால் ஒன்றும் செய்ய முடியாது என கை விரிக்கின்றனர்.

வங்கியில் வைப்பிலிட்ட ஆயிரக்கணக்கான ரூபா பணத்தை எவ்விதம் பெறுவது என்பது தெரியாமல் மக்கள் தவிக்கின்றனர். உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு வங்கிப் புத்தகத்தைத் தொலைத்த மக்களுக்கு வங்கியில் வைப்பிலிட்ட தொகையை மீள வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (ஓ-9)

# பனம் உற்பத்திப் பொருள்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புக்கள்

## உலக வங்கியின் உதவியுடன்

யாழ்ப்பாணம், ஜூலை 1



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனை சார் உற்பத்தியாளர்களிடம் இருந்து உற்பத்திப் பொருள்களை கொள்முதல் செய்து, உலக வங்கியின் ஒத்துழைப்புடன் சர்வதேச ரீதியில் ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச்சபை மேற்கொள்ளவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக உள்ளூர் பனைசார் உற் பத்தியாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பனை உற்பத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வங்கியின் திட்ட முன் மொழிவுக்கு அமைவாக பனைசார் உற்பத்திப் பொருள்களை சர்வதேசமயப்படுத்துவது தொடர்பாக துறைசார்ந்த அதிகாரிகள் கலந்துரையாடி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பனைசார் உள்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதியாளர்கள் ஊடாக இலகுவாகச் சந்தைப் படுத்துவதற்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்க வுள்ளது.

உள்ளூர் சார்ந்த தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்து, ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள் ஊடாக அவற்றை சர்வதேச ரீதியில் சந்தைப் படுத்தல் செய்யவுள்ளனர்.

பனைசார் உற்பத்திப் பொருள்களான பனந்தும்பு, பனை வெல்லம், பனாட்டு, பனங்களி மற்றும் பனையோலைசார் கைவினைப் பொருள்கள் அதிகளவு கேள்வியுடையதாக இனங் காணப்பட்டுள்ளதாக சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அதற்கான கேள்வியை இன்னும் அதிகரிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட திக்கம், வரணி மற்றும் வலிகாமம் பிரதேச செயலாளர்களால் பனஞ் சாராயம், பனங்கள், பதனீர் மற்றும் மருந்துத் துறைசார் ஸ்பிரிட் போன்ற பொருள்களையும் சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு அமைவாகவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-14)

## சமூக சேவகர் நல்லதம்பி நேற்றுமுன்தினம் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூலை 1

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் சமூகசேவகருமான அ.நல்லதம்பி நேற்றுமுன்தினம் காலமானார்.

அரச பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் பல்வேறு சமூக அமைப்புகளோடும் இணைந்து சேவையாற்றி வந்த அவர், 25 வருடங்களுக்கு மேலாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றி இருந்தார்.

சமூகசேவகர் நல்லதம்பியின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது. (ங)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 28.06.1994

இறப்பு 26.06.2012

அமரர்

**தவராசா தர்ஷிகா (தங்கா)**

ஓர் ஆண்டு ஆனதுவோ உன் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிசம் நீ
நித்தம் புலம்புகின்றோம் உன் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எம் துயரம்

புதிய செம்மணி வீதி,
வயல்வெளிக்கந்தாசமி கோயிலடி,
கல்வியங்காடு.
T.P: 0771994926

குடும்பத்தினர்.
சி.தவராசா
(ரக்ரர் தம்பியன்)

(38827)(10,16)



## மரண அறிவித்தல்

### செல்லத்துரை திருச்செல்வம்



பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருச்செல்வம் (29.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை -செல்வநேசம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன், ரதீஸ்வரன், குணதீஸ்வரன், தினேஸ்வரன், மிதுளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரையம்மா, தங்கலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், புஸ்பராணி, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராதிகா, சுதாநிதி, துதீசன் ஆகியோரின் அன்பு மாமனும், சாணுஜன், சஜீவ், சனோச், யாகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/10168) (10,16)


## அரச மருத்துவர் சங்கத்தின் தலைவராக மீண்டும் பாதினிய

யாழ்ப்பாணம், ஜூலை 01

அரச் மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவராக மூன்றாவது தடவையாகவும் மருத்துவர் அனுருத்த பாதினிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத் தேர்தலில் ஆயிரத்து 243 மேலதிக வாக்குகளைப் பெற்று அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவருடன் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட மருத்துவர் அத்தநாயக்கவுக்கு ஆயிரத்து 143 வாக்குகள் கிடைத்தன.

சங்க நிறைவேற்றுக்குழுவில் செயலாளராக மருத்துவர் சமனும், உபதலைவராக மருத்துவர் வடநம்பியும், பிரதிச் செயலாளராக மருத்துவர் ஆரியரத்னவும், பொருளாளராக மருத்துவர் நாத்தும், பத்திராதிபராக வர்ண சூரியவும், உதவிப் பத்திராதிபராக சாய் நிறஞ்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-4)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முருகன் கிருஷ்ணன்**

(ஓய்வு பெற்ற அதிபர்.
காரை/ஊரி அ.மி.த.க வித்தியாலயம்)

தோற்றம் 19.11.1934
மறைவு 01.07.2006

ஏழாண்டு ஆனதுவோ
எமதருமை ஐயாவே
என்றென்றும் எம் நெஞ்சில்
நிலைத்திருக்கும் உங்கள் பாசமுகம்

பாலாவோடை களபூமி,
காரைநகர்.

பாசம்மிக்க மனைவி மின்னல் கொடி
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 40 ஆண்டு நிறைவைக் கண்ட கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரி



கைதடி, ஜூலை 01
கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் வைத்தியசாலைகேட்போர்கூடத்தில்பொறுப்பதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராஜா தலைமையில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து சேவைபுரிந்து40வருடத்தைபூர்த்தி செய்த எஸ்.மலக்கியாஸ் கௌரவிக்கப்பட்டதுடன் 40 வருட நிறைவையொட்டி 40 பயன் தரு மரங்களும் வைத்தியசாலை வளாகத்தில் நடப்பட்டன.
வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை ஊழியர்கள், நலன் விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-288-51)

# ஆலய புனரமைப்புகள் குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
குடாநாட்டில் அழிவடைந்த மற்றும் கைவிடப்பட்ட ஆலயங்களை புனரமைப்புச் செய்து மக்களது பயன்பாட்டுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கடந்த காலப் போர்ச் சூழல் மற்றும் இடப்பெயர்வு போன்ற காரணங்களால் இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் சிதைவடைந்து இருப்பதுடன் கைவிடப்பட்ட நிலையிலும் பல்வேறு ஆலயங்கள் காணப்பட்டன.
இந்த நிலையில் குறித்த ஆலயங்கள் கிராமத்துக்குரிய அடையாளச் சின்னங்களாகவும் , மக்களது மத வழிபாட்டுத் தலங்களாகவும் கலாசாரப் பின்னணியுடன் இணைக்கப் பட்டிருந்தன.
இந்த நிலையில் குடாநாட்டில் இருந்து வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களது ஒத்துழைப்புடன் அழிவடைந்த ஆலயங்களை மீளப்புனரமைப்புச் செய்து மக்கள் பயன்பாட்டுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மீள்குடியமர்வுகளை மேற்கொண்ட பகுதிகளில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 30 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன**

கிராமிய அமைப்புக்கள் மற்றும் இந்து, கிறிஸ்தவ அமைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி புலம்பெயர் தமிழர்கள் அதற்கான நிதி வழங்கலை மேற்கொண்டு வருகின்றனர்.
இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியமர்வுகளை மேற்கொண்ட பகுதிகளில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 30 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளன.
இதனை விட பிரதேச மக்களது ஒத்துழைப்புடனும் சில ஆலயங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (வ-14)



## இளைஞர்கள் சேவை மன்றத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீடு திறப்பு



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதியுதவியுடன் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சுன்னாகம் மதவடி வீதியில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. நிர்மாணிக்கப்பட்ட வீட்டை வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சரத் சந்திபாலா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.
யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரா உட்பட களுத்துறை மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் மகேந்திர சந்திரசேனா, மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஆர்.பிரேமரட்ண மற்றும் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனத் தலைவர் எஸ்.லக்சன் ஆகியோருடன் களுத்துறை மாவட்டத்தில் இருந்து வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டனர். (வ-86)

## பொன்னாலை கிராமத்துக்கு உட்கட்டுமான அபிவிருத்தி தேவை

### வேள்ட் விசன் நிறுவனத்துக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
பொன்னாலை மேற்கில் மீள்குடியமர்ந்த கிராமத்துக்கு நூல் நிலையம், பொதுநோக்கு மண்டபம், சனசமூக நிலையம் என்பன உருவாக்கப்பட வேண்டும்.
இந்தப் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள யாழ்.வேள்ட் விசன் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் முன்வரவேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் கடிதம் மூலம் கோரியுள்ளார்.
பொன்னாலையில் மீளக்குடியமர்ந்த கிராமத்தில் 350 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.
இந்த மக்களின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்குமாறு கோரியே பிரதேச செயலருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார் பிரதேச செயலர். (எ-50)

## நாவற்குழி ம.வியில் சுகாதாரக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூலை 1
வரணி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்கும் அன்னையர் கழகங்களின் சுகாதாரக் கண்காட்சி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
கண்காட்சியை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் க.தயாளன் நாடா வெட்டித் திறந்து வைப்பார்.
ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மூன்றாவது கண்காட்சியாக இடம்பெறவுள்ளது.
பிரிவால் ஆறு பிரிவுகளில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஏற்கனவே சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு ஆகிய பிரிவுகளில் நடத்தி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி தெற்கு, நாவற்குழி, கோவிலாக்கண்டி, மறவன்புலோ ஆகிய அன்னையர் கழகங்களால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப் படவுள்ளன. (வ-9)

## அடுத்தடுத்து மூன்று தடவை நெஞ்சு வலி இரு முறை கை வைத்தியம்; அடுத்து.......

### உலகை விட்டுச் சென்றார் வயோதிபர்

ஒரே நாளில் இரு தடவைகள் ஏற்பட்ட நெஞ்சு வலிக்கு கை வைத்தியம் நடந்தது. அதை அடுத்து மூன்றாவது தடவையாக ஏற்பட்டது நெஞ்சுவலி. அதில் இருந்து தப்ப முடியவில்லை.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது:
காலையில் நெஞ்சுவலி ஏற்பட்டபோது உள்ளி அவித்த நீரைக் குடித்ததால் குணம் ஏற்பட்டுள்ளது. மதியமும் அதே போன்று நெஞ்சுவலி ஏற்ப்பட்டபோது அதே உள்ளி நீரைக் குடித்து குணமாகியது. இரவு உணவருந்திய பின்னர் மூன்றாவது தடவையாக நெஞ்சுவலி ஏற்பட்டது. அவருக்கு குடிநீர் தயாராகிக் கொண்டிருந்தது. குடிநீர் தயாராகும் போதே நிலைமை மோசமானது. அதன் பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோது அவரது உயிர் பிரிந்து விட்டது.

**முதலாவது அல்லது இரண்டாவது தடவை மாரடைப்பு ஏற்பட்டபோது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தால் காப்பாற்றியிருக்கலாம்**

உடற்கூற்றுப் பரிசோதனையில் ஒரே நாளில் மூன்று தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டது தெரியவந்தது. மந்துவில் வாசியான வயோதிபருக்கு முதலாவது அல்லது இரண்டாவது தடவை மாரடைப்பு ஏற்பட்டபோது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தால் காப்பாற்றியிருக்கலாமெனவும் நோயின் தன்மை தெரியாமல் கை வைத்தியம் செய்வதால் அநியாயமாக உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.
மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை (வயது-72) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-9)

## பனை அபிவிருத்தி சபை ஊழியருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களை யும் சேர்ந்த பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் 14 பேருக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
பனை அபிவிருத்திச் சபையின் கீழ் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சபையின் நடவடிக்கைகளுக்கு அமைவாக தற்போது நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஊழியர்களின் வாழ்வாதார தேவைகள் நலன்பெறக் கூடிய வகையில் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது எனும் தீர்மானத்துக்கு அமைவாக வடமாகாணத்தில் 38 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங் கப்பட்டுள்ளன.
இதனடிப்படையில் கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய வெளி மாகாணங்களையும் உள்ளடக்கியதாக கடமையில் உள்ள ஊழியர்கள் 14 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படவுள்ளது- எனவும் தெரிவித்தார். (வ-14)

## கழிவு நீர் தேங்கி இருக்கும் குருநகர் வடிகால் வாய்க்கால்கள்

### மாநகர சபை உறுப்பினர் பரஞ்சோதி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1
குருநகர் பிரதேசத்தில் உள்ள கழிவுநீர் வழிந்தோடும் வடிகால் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாததால் கழிவு நீர் தேங்கி நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர உறுப்பினர் அ.பரஞ்சோதி குற்றஞ்சாட்டியுள்ளார்.
குறித்த பிரதேசத்தில் உள்ள வடிகால் வாய்க்கால் களை மாநகரதொழிலாளர்கள்சரியான முறையில் துப்புரவு செய்வதில்லை.
இதன் காரணத்தால் கழிவு நீர் கடலுக்கு வடிந்து ஓடுவது தடைப்பட்டிருப்பதோடு அவை மக்களின் குடியிருப்புக்களை முற்றுகையிட்டு உட்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.
அதுமட்டுமல்லாமல் இந்தக் கழிவு நீர் தேக்கத்தால் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்புகள் பெருகி சுகாதார சீர்கேடும் ஏற்படும் நிலைக் குத் தள்ளப் பட்டுள்ளனர்.
குறித்த பகுதி வடிகால் வாய்க்கால்களை துப்பு ரவு செய்யுமாறு பல தடவைகள் யாழ். மாநகர சபைக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டும் ஒருவித நடவடிக்கையும் இதுவரைக்கும் மேற்கொள் ளப்பட வில்லை. (வ-17)

# தமிழர் பிரச்சினையை மறக்கவில்லை

## காங்கிரஸ் கூட்டணி தொடர்பாக விளக்குகிறார் கருணாநிதி

சென்னை, ஜூலை 1

மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவளித்திருந்தாலும், அந்தக் கட்சியுடன் கூட்டணி இல்லை. அதனால் இலங்கைப் பிரச்சினையை மறந்து விடவில்லை என்று தெரிவித்துள்ளார் தி.மு.கவின் தலைவர் மு.கருணாநிதி.

நடந்துமுடிந்த மாநிலங்களவைத் தேர்தலில், தி.மு.க. வேட்பாளரும், மு.கருணாநிதியின் மகளுமான கனிமொழிக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கியிருந்தது.

அதையடுத்து கருணாநிதிக்கு தமிழர்கள் தரப்பில் இருந்து கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து இதுதொடர்பாக கருணாநிதி விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''மாநிலங்களவைத் தேர்தலில் கனிமொழிக்கு காங்கிரஸ் கட்சியிடம் இருந்து ஆதரவு கேட்டுப் பெறப்பட்டது. அதனால் இலங்கைப் பிரச்சினையை தி.மு.க. மறந்துவிட்டதாகச் சிலர் சொல்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சிகளிடமும், தே.மு.தி.க., மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளிடமும், பின்னர் காங்கிரஸ் கட்சியிடமும் ஆதரவு கேட்டது உண்மைதான்.



அதில் எந்தக் கட்சியிடமும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் மாநிலங்களவைத் தேர்தல் தொடர்பாக மட்டுமே பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

ஆனால் ஒரு சிலர் காங்கிரஸ் கட்சியோடு தி.மு.க. உறவு கொண்டுவிட்டது, இலங்கைப் பிரச்சினையைக் கை கழுவிவிட்டது என்றெல்லாம் வெறுப்பு அரசியல் செய்கின்றனர்.

13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை இரத்து செய்யும் இலங்கை அரசின் முயற்சியை மத்திய அரசு தடுக்க வேண்டும் என்று இப்போதும் தி.மு.க. வலியுறுத்துகிறது.

இலங்கைப் பிரச்சினை வேறு. மாநிலங்களவைத் தேர்தல் வேறு. கூட்டணி என்பது வேறு. ஆனால் அனைத்தையும் ஒன்றாக இணைத்து குழப்பம் விளைவித்துவிட சிலர் முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியபோது, தி.மு.கவின் மத்திய அமைச்சர்களும் விலகினார்கள்.

மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்த காரணத்தால் தி.மு.கவைச் சேர்ந்த யாரும் மத்திய அரசில் சேர்ந்துவிடவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சோனியாவுக்கு நன்றி கூறினார் கனிமொழி

சென்னை, ஜூலை 1

மாநிலங்களவைத் தேர்தலில் தமக்கு ஆதரவளித்தமைக்காக காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்திக்கு திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர் கனிமொழி நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெற்ற மாநிலங்கள் அவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன்கனிமொழி வெற்றி பெற்றிருந்தார். அதையடுத்து சோனியா காந்தியுடன் நடைபெற்ற சந்திப்பில் திராவிட முன்னேற்றக் கழக தலைவரான கனிமொழியுடன் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டி.ஆர்.பாலுவும் கலந்து கொண்டார். அதன்போதே கனிமொழி, சோனியா காந்திக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஒன்பது வருடங்களாக காங்கிரஸின் கூட்டணி அரசில் பதவி வகித்த திராவிட முன்னேற்ற கழகம் தற்போது அரசில் இருந்து விலகியுள்ளது. இருகட்சிகளுக்கும் இடையில் சுமுக உறவு இல்லாத போதும் ஆச்சரியமளிக்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கியுள்ளது. (ற)

## பாரதிராஜாவின் படத்துக்கு எதிராகப் போராட்டம்

சென்னை, ஜூலை 1

சமூகத்தை கொச்சைப்படுத்திவிட்டதாக கூறி, இயக்குநர் பாரதிராஜா வீட்டை முற்றுகையிட்டு போர்வர்ட் பிளாக் கட்சியினர் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இயக்குநர் பாரதிராஜாவின் அன்னக்கொடியும், கொடிவீரனும் திரைப்படம் திரைக்கு வந்துள்ளது. இந்தப்படத்தில் இடம் பெற்றுள்ள சில காட்சிகளுக்கு அகில இந்திய போர்வர்ட் பிளாக் கட்சி கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தேனியில் உள்ள பாரதிராஜா வீட்டின் முன்பாக போர்வர்ட் பிளாக் கட்சியினர் திடீரென திரண்டனர். அதையடுத்து விரைந்து வந்த பொலிஸார், அவர்கள் வீட்டை நெருங்கும் முன்பு தடுத்து நிறுத்தினர்.

அதன் பின்னர் போர்வர்ட் பிளாக் கட்சியினர் வீட்டுக்கு அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



அன்னக்கொடி சினிமா வில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை இழிவுபடுத்தும் வகையில் காட்சிகள் அமைக்கப்பட்டு உள்ளது. சமூக நல்லிணக்கத்தை கெடுக்கும் விதமாகவும், கலவரத்தை தூண்டும் விதமாகவும் உள்ளது.

இந்த சினிமா மீண்டும் தென் தமிழகத்தில் பிரச்சினை ஏற்படுத்துவதாக உள்ளது. சமூகத்தை கொச்சைப்படுத்தி நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயலை பாரதிராஜா செய்து உள்ளார்.

இதனை கண்டிக்கிறோம். எனவே அன்னக்கொடி படத்தை தடை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## உத்தரகாண்ட் உயிரிழப்புகள் 10,000



மீட்புப் குழுவினரால் மீட்கப்பட்டு கொண்டு வரப்படுவோரிடம், தமது உறவுகளைப் பற்றி தகவலறியக் காத்திருக்கும் உறவினர்கள்..

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டக் கூடும் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனர்த்தங்கள் நடைபெற்று 14 நாள்கள் கடந்துள்ள போதும் உயிரிழந்தோர் எண்ணிக்கையைச் சரியாக வரையறுக்க முடியவில்லை. இடிபாடுகள் மற்றும் குப்பைகளுக்குள் உடல்கள் சிக்குண்டுள்ளதால் அவற்றைக் கண்டுபிடிப்பதில் மீட்புப் பணியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது அந்தப் பிரதேசத்தில் நோய் தொற்றுகள் ஏற்படத் தொடங்கியுள்ளதை அடுத்து நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. (ற)

## கட்சிக்கு வந்தோருக்கு முக்கிய பொறுப்பு

சென்னை, ஜூலை 1

அ.தி.மு.க.வில் இணைந்து கொண்ட தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பரிதி இளம்வழுதிக்கும், பா.ம.கவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் பொன்னுச்சாமிக்கும் அ.தி.மு.கவில் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''அ.தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்களாக முன்னாள் மத்திய அமைச்சர் இ.பொன்னுசாமியும், முன்னாள் அமைச்சர் பரிதி இளம்வழுதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மனைவியின் பக்தியில் குருடான கணவன்

சென்னை, ஜூலை 1

பக்தி பரவசத்தில் கணவனின் கண்களை குத்தி குருடாக்கியுள்ளார் மனைவி. இந்தச் சம்பவம் இந்தியாவின் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தின், திருமூர்த்திமலை பகுதியைச் சேர்ந்த விவசாயி மல்லப்பன் (வயது 40). அவரது மனைவி காளியம்மாள். அவர்களுக்கு 3 மகன்கள் உள்ளனர்.

கடந்த புதன்கிழமை மல்லப்பன் இரு கண்களிலும் படுகாயத்துடன் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் மல்லப்பனின் கருவிழிகள் பாதிப்படைந்ததால் அவரது பார்வையை மீளப்பெறமுடியவில்லை.

மல்லப்பனின் கண்களுக்கு என்ன நடத்தது என்று விசாரணை மேற்கொண்ட போதே பக்தியின் பரவசம் தான் இதற்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கணவனும், மனைவியும் தான் வீட்டில் இருந்துள்ளனர். அப்போது வீட்டைப் பூட்டிவிட்டு பூசையில் ஈடுபட்டுள்ளனர். இந்த பூசை வழிபாடுகள் தொடர்ந்து இரண்டு நாள்கள் இடம்பெற்றுள்ளது. இருவரும் இருநாள்களாக எதுவும் உண்ணவில்லையாம். மூன்றாம் நாளான புதன்கிழமை காளியம்பாளுக்கு ஏற்பட்ட பக்திப் பரவசத்தில் சிக்கியது மல்லபனின் கண்கள்தான். அவரின் இருகண்களிலும் காளியம்பாள் சரமாரியாகக் குத்தியுள்ளார், அதையடுத்து அவரது இரு கண்கள் முற்றாக பார்வையற்றுப் போயுள்ளன.

காளியம்மாள் சற்று மன நிலை பாதிப்புக்கு உள்ளானவர் என்று இப்போது தெரிய வருகின்றது. (ற)

## மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசு பாராமுகம்; தொடர்ந்தால் மக்களைத் திரட்டிப் போராட்டங்கள்

### எச்சரிக்கின்றார் வைகோ

சென்னை, ஜூலை 1

இலங்கை இராணுவத்தால் இதுவரை 578 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர், ஆனால், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் மத்திய அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கிறது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராமநாதபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இலங்கை இராணுவத்தால் இதுவரை 578 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இந்திய மத்திய அரசு அதுகுறித்துக் கவனம் செலுத்தாது வேடிக்கை பார்க்கின்றது.

நான்கரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்திருக்கிறேன். மக்கள் பிரச்சினைக்காக 5,000 கி.மீ., நடைப் பயணம் மேற்கொண்டுள்ளேன். தன்மானம், சுயமரியாதை எங்களுக்கு இரு கண்கள்.

இந்திய மத்திய அரசு இது குறித்து கவனம் செலுத்தாது தொடர்ந்தும் இருக்குமானால் நாங்கள் பெருமெடுப்பில் போராட்டங்களை நடத்துவோம்.

சட்டசபையில் எனக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. மக்களவைத் தேர்தலில் போட்டியிடவும் இல்லை. ஆனாலும் எமக்குப் பெரும் மக்கள் பலம் இருக்கின்றது'' என்று தெரிவித்தார் வைகோ.(ற)



# எகிப்தில் தொடர்கின்றது போராட்டம்

## ஜனாதிபதியை பதவி விலகக் கோரி இலட்சக்கணக்கானோர் வீதிகளில்

கெய்ரோ, ஜுலை 1
எகிப்தில் ஜனாதிபதி முர்சிக்கு எதிராக இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் உக்கிரம் அடைந்துள்ளன.
எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கெடுத்துள்ளனர்.
ஜனாபதி முகமது முர்சி பதவி விலக வேண்டும் என்று 2 கோடி25இலட்சம்கையெழுத்துகளைச் சேகரித்துள்ள எதிர்க்கட்சியினர், அதை ஆதாரமாகக் கொண்டு முர்சி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். அவர்களின் ஏற்பாட்டில் நடத்தப்படும் முர்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கெடுத்துள்ளனர். அதையடுத்து அங்கு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையே வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை சுமார் 10க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
எதிர்க்கட்சிகளால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் லட்சக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர். அதையடுத்து எகிப்தின் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிக் கடும் இராணுவப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. (ற)



# தலாய் லாமா குறித்த கொள்கையில் மாற்றமில்லை



பீஜிங், ஜுலை 1
திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு எதிரான கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை என்று சீன அரசு தெரிவித்துள்ளது.
பிரிவினைவாதக் கோரிக்கையை தலாய் லாமா கைவிட்டால் மாத்திரமே, கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.
சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக திபெத்தில் 1959ஆம் ஆண்டு நிகழ்ந்த கிளர்ச்சி தோல்வி அடைந்ததையடுத்து இந்தியாவில் தலாய் லாமா தஞ்சம் புகுந்தார்.
பின்னர், அவர் நாடு கடந்த திபெத் அரசை ஏற்படுத்தினார். இப்போது அரசியல் தலைமையைக் கைவிட்டு, மதத் தலைவராக மட்டுமே உள்ள தலாய் லாமா குறித்த கொள்கையில் சீன அரசு மாற்றம் கொண்டு வந்துள்ளது என்று தகவல் வெளியானது.
குறிப்பாக, தலாய் லாமாவை மதத் தலைவராக மதித்து வெளிப்படையாக வணங்குவதற்கும், அவரது புகைப்படத்தை வைத்துக்கொள்வதற்கும் திபெத்தில் உள்ள புத்த மதத்தினருக்கு சீன அரசு தடை விதித்திருந்தது. அத்தடையை இப்போது விலக்கிக் கொண்டுள்ளது என்று ஊடகங்களில் செய்தி வெளியானது.
எனினும் அதுகுறித்து சீன அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,
''தலாய் லாமாவுக்கு எதிரான எங்கள் கொள்கை மிகவும் தெளிவாகவும், நிலையானதாகவும் உள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை. எங்களைப் பொறுத்தவரை அவர் ஒரு பிரிவினைவாதி. சீனாவுக்கு எதிரானவர். சீன அரசுடன் உறவை மேம்படுத்த அவர் விரும்பினால், பிரிவினைவாதக் கோரிக்கையை கைவிட வேண்டும். திபெத்தில் அமைதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை விமர்சித்து அறிக்கை வெளியிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 500 ஆண்டுகளுக்குப் பின் மீட்கப்பட்ட சிறுமி



நோய்வாய்ப்பட்ட சாதாரண பெண்ணை டாக்டர்கள் பரிசோதிப்பது போல தோன்றும் இந்தப் படத்தில் இருப்பவர், சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் பனியில் உறைந்து இறந்து போன 15 வயது சிறுமி என்றால் நம்புவீர்களா?
இறந்து ஐநூறு வருடங்களுக்கு மேலாகியும், இன்னும் உடலில் உள்ள இரத்தம் உறையாத மூன்று மம்மிக்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 1999ஆம் ஆண்டு லுல்லைலிகோ மலையில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. உறைந்த நிலையில் இருந்த அந்த உடல்களில் பாகங்கள் எதுவும் கெட்டுப் போகவில்லை. இரத்தம் உறையாத அளவிற்கு பதமாக பாதுகாப்பாக அந்த உடல்கள் இருந்திருக்கின்றன. தோல் கூட புத்துணர்ச்சியுடன் இருப்பதுதான் ஆச்சரியம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)



- 1999ஆம் ஆண்டு ஆர்ஜென்ரீனாவில் உள்ள லுல்லைலிகோ எனும் இடத்தில் சுமார் 6,739 மீற்றர் ஆழத்தில் இந்தச் சிறுமி கண்டெடுக்கப்பட்டார்.
- இன்கா இனத்தைச் சேர்ந்த இப்பெண் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டு, கடவுளுடன் வாழ ஆசைப்பட்டு, மதத்தின் பெயரால் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் தெரிவிக்கிறார்கள்.
- மதத்தின் பெயரால், பனியில் புதைக்கப்பட்ட இச்சிறுமிக்கு 'லா டென்சிலா', அதாவது திருமணமாகாத இளம் பெண் என ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர்.

# வெளியுறவுக் கொள்கையில் எதிர்காலத்தில் மாற்றங்கள்

## ஈரானின் புதிய ஜனாதிபதி தெரிவிப்பு

தெஹ்ரான், ஜுலை 1
அனைத்து நாடுகளுடனும் இணக்கமான உறவை ஏற்படுத்தக் கூடிய வகையில் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்று தெரிவித்துள்ளார் ஈரானின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள ஹசன் ரௌகானி.
கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரௌகானி 51 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அதையடுத்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ளார்.
தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் முதன்முறையாக நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார் ரௌகானி. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
''ஏனைய நாடுகளுடன் இணக்கமான உறவை , நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும், பதற்றத்தைத் தணிக்கும் வகையிலும் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்படும்.
அதன்பெரருட்டு தீவிரப் போக்கு இல்லாத சமநிலையுடன் கூடிய கொள்கைகள் வகுக்கப்படும். அதேவேளை, அது பிறநாடுகளிடம் சரணடைவதாக அமையாது ஆக்கபூர்வமானதாக அமையப் பெறும். ஏனைய நாடுகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யக்கூடியதாக அமையும். அதேசமயம் ஈரானின் உரிமைகள் தொடர்பில் பாடுபடுவேன்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.
அணு செறிவூட்டல் தொடர்பாக ஈரானுக்கும், அமெரிக்க உட்பட்ட மேற்குலகு நாடுகளுக்கும் இடையே கருத்து முரண்பாடு நீண்டகாலமாகக் காணப்படுகின்றது.(ற)

# தென்னாபிரிக்காவில் ஒபாமா

நியூயோர்க், ஜுலை 1
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரின் மனைவி மிச்சல் ஒபாமா ஆகியோர் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளனர்.
எனினும் நெல்சன் மண்டேலாவை பார்வையிடுவதற்காக பராக் ஒபாமா வைத்திய சாலைக்கு செல்லமாட்டார் என்றும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.
ஆபிரிக்க நாடுகளுக்கான ஆறு நாள்கள் பயணத்தின் ஒரு கட்டமாகவே தென்னாபிரிக்கா சென்றுள்ள பராக் ஒபாமா, அந்த நாட்டு ஜனாதிபதி ஜெக்கப் ஷுமாவுடன் பேச்சு நடத்தவுள்ளார்.
வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து இந்த பேச்சுக்களில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# ஸ்நோடன் விவகாரம்: அமெரிக்கா – ஈக்குவடோர் மோதல் உச்சம்

நியூயோர்க், ஜுலை 1
அமெரிக்காவின் இரகசிய உளவுத் திட்டங்களை அம்பலப்படுத்திய ஸ்நோடன் விவகாரத்தால், நாளுக்கு நாள் புதிய சர்ச்சைகள் உருவாகி வருகின்றன. ஸ்நோடனுக்கு அடைக்கலம் அளிப்பது தொடர்பாக ஈக்குவடோருக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான மோதல் உச்சத்தை எட்டியுள்ளது.
சமூக வலைத்தளங்கள், அரசு வலையமைப்புகள் மூலம் உளவு பார்த்த அமெரிக்காவின் இரகசியத் திட்டங்கள் பற்றி ஊடகங்களுக்குத் தெரிவித்த எட்வேர்ட் ஸ்நோடன் தொடர்ந்து ஆறாவது நாளாக மாஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருக்கிறார். அவருக்கு தென்னமெரிக்க நாடான ஈக்குவடோர் அடைக்கலம் அளிக்கும் என்று கூறப்பட்ட நிலையில், தங்கள் நாட்டுக்கு உட்பட்ட பகுதிக்கு வந்தால் மட்டும் ஸ்நோடனுக்கு அடைக்கலம் அளிப்பது குறித்து முடிவு செய்ய முடியும் என்று அந்நாடு தெரிவித்துள்ளது.
''ஸ்நோடன் இப்போது ஈக்குவடோர் எல்லைக்குள் இல்லை. அதனால் அடைக்கலம் கேட்கும் அவரது விண்ணப்பத்தை இப்போது ஏற்க இயலாது. அவர் ஈக்குவடோர் பகுதிக்குள் வந்தால், அது பற்றிப் பரிசீலிப்போம். ஆனால் அவர் இப்போது ரஷ்யாவில் இருக்கிறார். எல்லா நாடுகளும் அவர்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றலாம். நாங்கள் உறுதியாகச் சொல்ல விரும்புவது ஸ்நோடன், எங்கள் பகுதிக்குள் இல்லை என்பதை மட்டுமே'' என்று ஈக்குவடோர் ஜனாதிபதி ரபேல் கபீயா தெரிவித்துள்ளார்.




### மோதல்

இந்த விவகாரம் அமெரிக்காவுக்கும் ஈக்குவடோருக்கும் இடையேயான மோதலை அதிகரித்துள்ளது. அதன் உச்சகட்டமாக கொகைன் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக ஈக்குவடோர் அறிவித்துள்ளது. தம்மை மிரட்டுவதற்கான ஆயுதமாக அதை அமெரிக்கா பயன்படுத்தி வருவதால், இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று ஈக்குவடோர் அரசு தெரிவித்துள்ளது. (ற)

## கிராபிக்ஸ், அனிமேஷன் கல்விக்கான புலமைப்பரிசில்




WIN 65% SCHOLARSHIP

மல்டிமீடியா புலமைப்பரிசில்

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- விரும்பிய மொழியில் பரீட்சை
- அடிப்படைத் தகைமை Grade 10
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி

இலவச புலமைப் பரிசில் பரீட்சை July 6th & 7th

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ். நகரில் 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677 | சாவகச்சேரியில் கட்டுக்காணி வீதி T.P : 021-2270267 | வவுனியா குருமன்காடு சந்தி மன்னார் வீதி T.P : 021-2262399


# வரணி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

வரணி, ஜூலை 1

வரணி பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்று தற்சமயம் வழங்கப்பட்டுள்ளது. கறுக்காய் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை பஸ் சேவையை நீடிக்கும் படி மக்களால் விடப்பட்ட கோரிக்கையும் யாழ்.அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் வரணிப் பகுதி இராணுவ அதிகாரி மேஜர் மங்கள. கிராமிய சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வரணி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

வேம்பிராய்ப் பகுதியில் இருந்து வரணி வைத்தியசாலை வரை வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர்த் திட்டத்தை கறுக்காய் பிரதேசம் வரை நீடிப்பு செய்யும்படி கோரி சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரி னோம். ஆனால் அதற்குரிய நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று சபையினர் தெரிவித்துள்ளனர்.

படையினரால் கையளிக்கப்பட்டும் காணிகளில் உள்ள பாதுகாப்பு அணைகள் முன்னர் இருந்தது போல் சமப்படுத்திக் கொடுக்கப்படும். வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள அரச காணியான உரக் களஞ்சியப் பகுதி தவிர்ந்த ஏனைய காணிகள் படிப்படியாக உரியவர் கட்டு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-122)





## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்குசெய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின்

எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே!
உமக்கு நன்றி

அடியாள்
(38820) (45.6.3)

## வீடு, வளவு விற்பனைக்கு

நகரின் மத்தியில், ஸ்ரான்லி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில், றயில் பாதைக்கு அருகில், பழைய வீடு கிணற்றுடன் கூடிய 3 பரப்பு 3½ குளி காணி விற்பனைக்கு.

தொடர்பு: 077 072 2204

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சாவகச்சேரிப் பகுதியில் டோமன் இன 1½ வயது ஆண், பெண் மற்றும் 52 நாள்கள் நிறைந்த நாய்க் குட்டிகளும், அல்சேஷன் குறெஸ் இன 1½ வயது, 6 மாதங்கள் பெண் நாய்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 485 2324

## வீடு வாடகைக்கு

நெல்லியடி பிரதான வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 704 9364

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள அசைவ உணவகத்திற்கு றொட்டி தயாரிப்பவர், சப்ளையர், சமையலாளர்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் நேரில்.

தொடர்பு: 077 624 5134

Little Aid
CHARITY NR 1129695
கிளிநொச்சி இலவச கணினிப் பயிற்சி நிலையம்

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆங்கில வகுப்பு ஆரம்ப நிகழ்வும்

இடம் - கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் திருநகர், கிளிநொச்சி

காலம் : 02.07.2013

நேரம் - காலை 10.00 மணி

**பிரதம விருந்தினர்**
கௌரவ. முருகேசு சந்திரகுமார் (பா.உ)
(பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற பிரதிக்குழுக்களின் தவிசாளரும்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.தவராசா
(முன்னையநாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.க.முருகவேள்
(வலயக் கல்விப்பணிப்பாளர் - கிளிநொச்சி)
திரு.த.ஜெயபாலன்
(அறக்கட்டளை உறுப்பினர் - லிட்டில் எய்ட் பிரித்தானியா)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.க.நாகேஸ்வரன்
(பிரதேச செயலாளர், கரைச்சி - கிளிநொச்சி)
திரு.கொன்ஸ்டன்ரைன்
(அறக்கட்டளை உறுப்பினர் - லிட்டில் எய்ட், பிரித்தானியா)
திரு.ஜோசப் விதானகே
(இணைப்பாளர் - லிட்டில் எய்ட், இலங்கை)

அன்புடன் அழைக்கின்றோம்

இலவச கணினி ஆங்கில வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
தொடர்புகளுக்கு - 0774700468

# 600 இற்கும் மேற்பட்டோர் சுகாதாரக் கண்காட்சியில்

தென்மராட்சி, ஜூலை 1
மட்டுவில் தெற்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதன்முறையாக கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட சுகாதாரக் கண்காட்சியில் 600 இற்கு மேற்பட்ட மக்கள் பார்வையிட்டு பயன் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
சரசாலை, மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, நுணாவில் மேற்கு ஆகிய அன்னையர் கழகங்களினால் உருவாக்கப்பட்ட பல்வேறு சுகாதார பொருள்கள் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.
கண்காட்சியை இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர், பொதுமக்கள் என பெருமளவானோர் பார்வையிட்டனர்.
குடும்ப நல சேவையாளர் போல வேடமணிந்த சிறுமியின் விழிப்புணர்வுப் பாடல் அனைவரையும் கவர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# சாவகச்சேரி நகரசபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

தென்மராட்சி, ஜூலை 1
சாவகச்சேரி நகர சபை டெங்கு ஒழிப்பு வாரத்தில் மூன்று இடங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளதாக அதன் சுகாதாரக் குழுவின் தலைவர் த.சுதர்சன் தெரிவித்தார்.
நுணாவில் மேற்கு காந்தாளம் பிட்டி மயான வளாகம், நகர சபை தொழிலாளர் விடுதிப் பிரதேசம், நகர சபை வளாகம் ஆகிய இடங்களில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் பற்றைகளாககாணப்படும்காணிகளைத் துப்புரவு செய்ய காணி உரிமையாளர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் இந்தக் காலப் பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாத பற்றைக் காணிகள் தொடர்பான நடவடிக்கைகளை நகர சபை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார்.
நகரப்பகுதியில்இயங்கும்உணவு நிலையங்களின்தரத்தைஉயர்த்துவது தொடர்பாக நிலைய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (வ-9)

# பனம் பொருள் உற்பத்திக்கு கிழக்கில் ஊக்குவிப்புகள்



**ஆலங்குடாப் பகுதியில், கைப்பணிப் பயிற்சிகளைப் பெற்ற 190 பேருக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம், ஜூலை 1
மட்டக்களப்பு ஆலங்குடாப் பகுதியில் பனை உற்பத்தி கைப்பணிப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த 190 பேருக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
பனை அபிவிருத்திச் சபை , பனை சார் உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப் படுத்தி பனைசார் உற்பத்தியாளர்களுக்குபயிற்சிகள்வழங்கி வருகின்றது.
வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே கைப்பணி பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டு, அவர்களது தொழில் முயற்சிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஆலங்குடாப் பகுதியில், கைப்பணிப் பயிற்சிகளைப் பெற்ற 190 பேருக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
இதனூடாக தொழில் முயற்சியாளர்கள் தமது தொழிலை விருத்தி செய்யக்கூடியதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-14)

# நெடுந்தீவில் விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1
நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஒரு வாரம் நெடுந்தீவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.
இதற்கான ஏற்பாடுகள் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்சியன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றன.
இதில் பாரம்பரிய விளையாட்டுக்களான குதிரை ஓட்டம், வண்டிச் சவாரி, தேங்காய் துருவுதல், நீச்சல், தெப்பம் செலுத்தல், கபடி, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கொடியெடுத்தல், கயிறு இழுத்தல், கரப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம், மென்பந்து, கிரிக்கெட் என்பன நடைபெறவுள்ளன. (வ-7)



# பார்வையாளருக்கான தங்குமிடம் அமைத்துத் தரக் கோரிக்கை

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்



தென்மராட்சி, ஜூலை 1
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பார்வையாளர் தங்குமிடம் அமைத்துத் தருமாறு பிற பிரதேசங்களிலிருந்து வரும் பார்வையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
சாவகச்சேரி வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட தூர இடங்களில் இருந்து வருவோர் தங்குமிட வசதி இல்லாததால் நீண்ட நேரம் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவிலும் வைத்தியசாலைக்கு வெளியேயும் தங்கியிருக்க வேண்டியுள்ளது.
வெளிநோயாளர் பிரிவில் உள்ள இருக்கைகளில் இருக்கும் வேளையில் அந்தப் பிரிவுக்கு வருகின்ற நோயாளர்களுக்கு இடையூறு ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்படுவதால் பார்வையாளர்களுக்கென முன்னர் இருந்தது போல தனியான பார்வையாளர் தங்குமிடம் அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.
20 வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் வைத்தியசாலை வளாகத்தில் பார்வையாளர் தங்குமிடம் அமைத்துக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)




சாவகச்சேரி பிரதேச இளைஞர்கழகங்களின் சம்மேளனத்தின் குருதிக் கொடை நிகழ்வு வியாழக்கிழமை கைதடி நுணாவிலில் உள்ள அறவழி நிலையத்தில் நடைபெற்றது. (வ-9)


# யாழில் நடப்பது கலாசார சீரழிவே

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.மாவட்டத்தில் நடப்பது விபசாரமல்ல, கலாசார சீரழிவு தான். தெற்கில் ஒரு சட்டம் வடக்கில் இன்னொரு சட்டம் இல்லை. நாடு முழுவதுக்கும் ஒரே சட்டம்தான் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி தெரிவித்தார்.
யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன் போது கலாசாரம் தொடர்பில் காரசாரமான விவாதம் பொலிஸாருக்கும், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் இடையில்நடைபெற்றது.
கடந்த சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலரால், பதிவு செய்யப்படாத விடுதிகளில் கலாசாரச் சீரழிவுகள் நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக பதிலளித்திருந்தனர். இந்த அறிக்கையை வாசித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.பிரதேச செயலரைப் பார்த்து கேலியாக விடுதியைப் பிடிக்கிறத்துக்கு நீங்கள் போக மாட்டியள் தானே என்று கேட்டார்.
அதற்கு யாழ்ப்பாண பிரதேச செயலாளர், சம்பவம் இடம் பெற்ற விடுதி தொடர்பாக குறித்த விடுதி உரிமையாளர் பதிவுக்கு விண்ணப்பித்திருந்தார். நான் அந்தப் பதிவை பரிசோதனை செய்வதற்காகத்தான் சென்றேன்.
விடுதியில் ஒருபெண் அறைக்குள் நின்றபோது அவரிடம் வயது எத்தனை என்று கேட்டேன். பின்னர் சிலரிடம் அடையாள அட்டை இல்லாத் காரணத்தாலும் பார்ப்பதற்கு அவர் குறைந்த வயதை உடையவர் போலவும் இருந்ததால், சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அந்தப் பெண்ணை பாதுகாப்பாக அவரது பெற்றோரிடம் ஒப்படைத்தேன் என்று தெரிவித்தார். இதன்போது சபையிலிருந்த பிரதேச செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் கரகோஷம் செய்தனர்.
உடனடியாக எழுந்த யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா, 18 வயதுக்கு மேற் பட்ட எந்தவொரு ஆணும், பெண்ணும் விரும்பி ஓர் அறைக்குள் இருக்கையில் அவர்களை நானோ, நீங்களோ கைது செய்ய முடியாது. அதற்கு அதிகாரமில்லை எனத் தெரிவிக்க பொலிஸ் தரப்பினர் கரகோஷம் செய்தனர்.
தென்பகுதியில் வேறு கலாசாரம், வடபகுதியின் கலாசாரம் தனித்துவமானது என்று சிவில் சமூகத்தினர் தெரிவிக்க பொலிஸார், சட்டம் நாடு முழுவதற்கும் ஒன்றுதான் என்றனர்.
வடபகுதிக்கு தேச வழமை சட்டம் உள்ளதைச் சுட்டிக்காட்டி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கலாம் எனக் கேட்க, பொலிஸார் தமக்கு தேச வழமைச் சட்டம் தெரியாது என்றனர்.
மேலும் பொலிஸார், 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு ஆணும், பெண்ணும் ஒரு அறையில் தனித்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று தெரிவிப்பதன் மூலம் பொலிஸாரே விபசார நடவடிக்கைக்கு உடந்தையாக செயற்படுகின்றனர் என்று சிவில் சமூகபிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.
இதற்குப் பதிலளித்த பொலிஸார், விபசாரம் என்றால், ஒரு பெண்ணுடன் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒரு அறையில் தங்கியிருந்த அல்லது ஒரு பெண்ணின் படத்தை எடுத்து அதற்கு விலைபேசி நடவடிக்கையை முன்னெடுப்பது தான். யாழ்ப்பாணத்தில் நடப் பது விபசாரமல்ல, கலாசார சீரழிவுதான்– என்றனர். (வ-5)

# யானைகள் அச்சுறுத்தலால் இடம்பெயர வேண்டியநிலை

## மட்டக்களப்பு விவசாயிகள் கவலை



மட்டக்களப்பு,ஜூலை 1

மட்டக்களப்பு, ஈரளக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் யானைகளின் அட்டகாசத்தால் தமது விவசாய நடவடிக்கைகளைக் கைவிட்டு அந்தக் கிராமங்களில் இருந்து இடம்பெயர வேண்டியநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஈரளக்குளம், ஆக்காட்டியாவெளி, நீலாவாணை போன்ற பகுதிகளில் மரக்கறித்தோட்டம், நெற் செய்கை போன்றவற்றை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பகுதிகளுக்கு யானைகள் நுழைந்து விவசாயச் செய்கைகளை அழிப்பதுடன் தற்காலிக வீடுகளையும் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆக்காட்டியாவெளிப் பகுதியில் 10 குடும்பங்கள் கால்நடை வளர்ப்பிலும் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வந்த நிலையில், யானைகளின் அச்சுறுத்தலினால் தாம் இடம்பெயர்ந்துள்ளனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# பேரினவாத சக்திகளுக்கு துணைபோகிறது அரசு

## சாய்ந்தமருதில் அஸாத் சாலி காட்டம்



அம்பாறை,ஜூலை 1

பள்ளிவாசல்களை தாக்குவது, முஸ்லிம்களின் கடைகளை உடைப்பது, இறைச்சிக் கடைகளுக்கு தீ வைப்பது போன்ற தீவிரவாத வேலைகளைச் செய்து வருகின்ற பேரினவாத சக்திகளுக்கு அரசு துணை போகிறது.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சாய்ந்தமருதில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலைக் கண்டித்து ஜனாதிபதியிடம் எனது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட்டு அரசில் இருந்து வெளியேறிய நான், முஸ்லிம் காங்கிரஸையும் வெளியேறுமாறு ரவூப் ஹக்கீமிடம் வலியுறுத்தினேன்.

அதற்கு அவர் முன்வராவிட்டால் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தும் நோக்கில் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து சுயேச்சை அணியொன்றை களமிறக்க தீர்மானித்தேன்.

அப்போது முஸ்லிம் காங்கிரஸ் அரச கூட்டில் இருந்து வெளியேறி தனித்துப் போட்டியிட முன்வந்தது. அதில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுமாறு ரவூப் ஹக்கீம் என்னை அழைத்தார். அதற்கு உடன்பட்ட நான், அம்பாறை மாவட்டத்தில் அல்லது திருமலையில் இடம்தருமாறு கேட்டேன். ஆனால் அதற்கு உடன்படாத ஹக்கீம் வேறு இடத்தில் என்னைக் களமிறக்கினார்.

அதற்கமைய காத்தான்குடியில் என்னை போட்டியிட வைத்தார். நான் துணிச்சலுடன் முகம் கொடுத்து வெறும் 5 நாள்கள் மட்டும் பிரசார வேலைகளைச் செய்து 7000 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்துக்கு வந்தேன்.

சிலரின் எதிர்ப்பால் காத்தான்குடிக்கு வர முடியாதிருந்த ரவூப் ஹக்கீமும் எனது பக்கபலத்தால் அங்கு வரமுடிந்தது.

அந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட முஸ்லிம் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் வாக்களித்தனர். நாமெல்லாம் சேர்ந்து பெற்றுக் கொடுத்த வெற்றியை எடுத்துக் கொண்டு ஹக்கீம் மீண்டும் அரசுடன் ஒட்டிக் கொண்டார்.

அதேபோன்றுதான் 13 ஆவது திருத்த சட்ட விடயத்திலும் நாடகமொன்றை அரங்கேற்ற முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிக்கிறது.-என்றார்.(ச)



கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப், பிரிட்டன் சென்றபோது ரெட்பிரிட்ஜ் நகரத்தின் முதல்வர் பெலிசிட்டி பேங்கைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-ரி-31)

# பொதுபல சேனாவை அழைக்கிறார் ஹிஸ்புல்லாஹ்

## கண்டிக்கத்தக்கது என்கிறார் றம்ழான்

மட்டக்களப்பு,ஜூலை 1

பொதுபல சேனாவை காத்தான்குடிக்கு அழைத்து வருவதாக பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறியிருப்பது காத்தான்குடி மக்களையும் காட்டிக் கொடுக்கும் செயல். இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் என்.கே. றம்ழான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக முஸ்லிம் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் பொதுபல சேனா அமைப்பினரை காத்தான்குடிக்கு அழைத்து வர ஹிஸ்புல்லாஹ் முயற்சிக்கின்றார். அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பிரதி அமைச்சினால் வழங்கப்படும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக நமது மண்ணின் கண்ணியத்தை தாரை வார்க்க இந்த நாட்டு உலமாக்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள் துணை போகக் கூடாது.

முஸ்லிம்கள் எதிர்க்கும் பொதுபலஷேனாவை ஹிஸ்புல்லாஹ் அழைத்து வருவது பொதுபல சேனாவை அங்கீகரிப்பதற்குச் சமனாகும்.

முஸ்லிம் சமூகத்தை பட்டம், பதவிகளுக்காக காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று கூறிய பிரதி அமைச்சர் இன்று இவ்வாறு நடந்து கொள்வது வேடிக்கைக்குரியது- என்றார். (ச-ரி)

# பிரதேச செயலகம் முக்கியமான இடம்

## செனவிரத்ன தெரிவிப்பு

அம்பாறை,ஜூலை1

அரச இயந்திரத்தை சரியான முறையில் வழிநடத்துகின்ற பணியை நிறைவேற்றுகின்ற ஓர் இடமே பிரதேச செயலகமாகும் என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.



நிந்தவூர் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டடங்கள் மாத்திரம் அமைக்கப்படுவதனால் சிறந்த நிர்வாக செயற்பாடுகள், நடைமுறைகள் நடைபெற்றுவிட முடியாது. அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் சிறப்பாக சேவையாற்ற வேண்டும்.

கிராம மட்டத்திலும், மாவட்டத்திலும், தேசிய மட்ட மட்டத்திலும் பல தரப்பட்ட தேவையுடைய மக்கள் உள்ளனர். அவர்களுக்கு நாம் சிறந்த சேவையை வழங்க வேண்டும்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாடுகள் எம்மிடமிருந்து களையப்பட்டு பணிகளை இதய சுத்தியுடன் மக்களுக்காக பணியாற்ற வேண்டும். -என்றார். (ச)

# தொழில்நுட்பப் பிரிவு கற்கைக்கு கிழக்கில் 16 பாடசாலைகள் தெரிவு

மட்டக்களப்பு, ஜூலை 1

கல்வி அமைச்சால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பிரிவுக்கான தொழில்நுட்பப் பிரிவு கற்கைநெறிக்காக கிழக்கு மாகாணத்திலிருந்து 16 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம்.நிசாம் தெரிவித்தார்.

அவற்றில் 8 தேசிய பாடசாலைகள் உள்ளடங்குகின்றன. ஏனைய பாடசாலைகள் ஜி.சீ.ஈ உயர்தரப் பிரிவைக் கொண்ட பாடசாலைகள் என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் தலா ஒவ்வொரு பாடசாலை இந்தத் துறையில் கற்பதற்கு கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# எதிர்ப்பின் மத்தியிலும் கூட்டத்தில் கலந்துகொண்ட அஸாத்



மட்டக்களப்பு,ஜூலை 1

ஓட்டமாவடியில் நடைபெறவிருந்த கூட்டத்தில் அசாத் சாலி கலந்து கொள்ளக் கூடாது எனக் கோரி ''ஒற்றுமைப்பட்ட இலங்கையர் நாம் வீரமும் நேசமும் மிக்க தலைமையுள்ள இந்த நாட்டை குழப்பாதே'' என்ற தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கல்குடா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் எஸ்.ஏ.ஜ. றபீம் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்து கொண்ட போதிலும் ஓட்டமாவடிக் கூட்டத்தில் அஸாத்சாலி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)


## கல்வி முறையை மாற்றி அமைக்க ரூ.4,000 கோடி ரூபா செலவு

நாட்டுக்கு உகந்த வகையில் கல்வி முறையை மாற்றி அமைக்க 4,000 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கட்டுகாஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: மஹிந்தோதயத் திட்டத்தின் கீழ் உயர்தரப் பரீட்சையில் மாற்றம் கொண்டுவர உத்தேசித்துள்ளோம்.


எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இது நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய தொழில்நுட்பப் பாடங்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.



தன்சானியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாருஸ்ஸலாமில் நடைபெற்ற சர்வதேச ஒத்துழைப்புக்கான கருத்தாடல் மாநாட்டில் கலந்துகொண்டார். மாநாட்டில் பங்கேற்ற சர்வதேச தலைவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்துக்கொண்ட படம்.

ரயில் – பஸ் நிலையங்களை இணைத்து

## பன்முகப் பயணிகள் போக்குவரத்து மேடை



கொழும்பு, ஜூலை 1

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தையும் மத்திய பஸ் நிலையத்தையும் ஒன்றாக இணைத்து பன்முக பயணிகள் போக்குவரத்து மேடை ஒன்றை நிர்மாணிக்க போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் நிர்மாணப் பணிகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு நகரை வந்தடையும் 6 பிரதான பஸ் மார்க்கங்களின் நுழைவாயில்கள் மற்றும் 4 ரயில் மார்க்கங்களில் நுழைவாயில்களை ஒருங்கிணைத்து 'மொனோ ரயில்' சேவை ஒன்றும் அதனுடன் இணைக்கப்படவுள்ளது.

சகல வசதிகளையும் கொண்டதாக உயர் தொழில் நுட்பத்துடன் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த ரயில் - பஸ் ஒருங்கிணைந்த பயணிகள் மேடை சம்பந்தமான வரைபுத் திட்டங்கள் மொறட்டுவ பல்கலைக்கழகம், நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, பொலிஸ் துறை ஆகியோரின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்படவுள்ளன. (ச-22)

# படை அதிகாரிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சி

### தமிழகத்தில் இருந்து வெளியேறியதை அடுத்து



கொழும்பு,ஜூலை1

தமிழ்நாட்டின் வெலிங்டன் பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் பயிற்சி நிலையத்தில், பயிற்சியைத் தொடர முடியாமல் வெளியேறிய இரண்டு சிறிலங்கா படை அதிகாரிகளும் பாகிஸ்தானுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் படையினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புகள் வலுத்ததால், இந்திய மத்திய அரசு வெலிங்டனில் பயிற்சி பெற்று வந்த மேஜர் சன்ன ஹரிஸ்சந்திர, விங்கொமாண்டர் சாந்த திசநாயக்க ஆகியோரை செகந்தராபாத்தில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தது.

ஆனால் அதனை நிராகரித்துவிட்டு, இரு படை அதிகாரிகளையும் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்புக்குத் திருப்பி அழைத்திருந்தார்.

அவர்களுக்கு வேறெங்காவது இதே பயிற்சியைத் தொடர ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என்று அவர் கூறியிருந்தார்.

இந்தநிலையில், கொழும்பு வந்திருந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் பாதுகாப்புச் செயலரும், இராணுவத் தளபதியும் இதுகுறித்து ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதையடுத்து பாகிஸ்தானில் உள்ள குவேட்டாவில் கட்டளை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு, இருபடை அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரியவிடம் கேட்டபோது, அதற்கான சாத்தியத்தை அவர் நிராகரிக்கவில்லை.

குவேட்டாவில் உள்ள கட்டளை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியே, பாகிஸ்தான் இராணுவத்தின் மிகப் பழைமையான பயிற்சிக் கல்லூரியாகும். (ச)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை

## உள்ளூராட்சி சபைகள் தட்டிக்கழிக்க முடியாது

கொழும்பு,ஜூலை1

டெங்கு தடுப்பு நடவடிக்கையில் உள்ளூராட்சிச் சபைகள் தமது பொறுப்புகளை தட்டிக்கழித்து விடமுடியாது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

டெங்கு தடுப்பு நடவடிக்கை தொடர்பான அமைச்சரவை உப குழுவின் அமர்வு இடர் முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்றது. இந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.




கழிவுப் பொருள்களை முறையாக அகற்றி பிரதேசங்கள் தூய்மையாகப் பேணப்பட்டால் டெங்கு பரவ முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மாணவர் ஒருவருக்கு டெங்கு ஏற்படுமானால் அது ஏற்படக் காரணம் என்ன என்பதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்க வேண்டும். அதற்கேற்ப பாடசாலைச் சுற்றாடல் சுத்தமாக பேணப்பட வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

## இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்த வேண்டும்

### பாகிஸ்தானிய கூட்டுத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 1

இலங்கை மற்றும் பாகிஸ்தான் இராணுவங்களுக்கு இடையில் உள்ள உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தானிய கூட்டுப்படை தளபதி ஜெனரல் கயானி தெரிவித்தார்.

தியத்தலாவையில் சனிக்கிழமை நடைபெற்ற இராணுவ அணிவகுப்பின் பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையும் பாகிஸ்தானும் இராணுவ ஒத்துழைப்புகளில் முன்னிலை வகிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையும் பாகிஸ்தானும் சமாதானத்தை விரும்பும் நாடுகளாகும். எனவே சமாதானத்தைக் கருதி பிராந்திய ரீதியில் இராணுவத்தை வலுவுள்ளதாக வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இதன்போது நாடுகளின் இறைமை பாதிக்கப்படக் கூடாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் 30 வருட போரின் போது பாகிஸ்தான் இலங்கை இராணுவத்துக்கு உறுதுணையாக செயற்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## உக்ரேன் நபர்கள் மூவருக்கு சிறை

கொழும்பு,ஜூலை 1

கடன் அட்டைகளைப் பயன்படுத்தி தன்னியக்க இயந்திரங்களில் பண மோசடி செய்த 3 உக்ரேன் நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சனிக்கிழமை களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உக்ரேன் நபர்கள் வஸ்கடுவ பகுதியில் தங்கியிருந்த இரண்டு விடுதிகளை சோதனைக்குட்படுத்திய பொலிஸார் 52 லட்சம் ரூபா பெறுமதியான உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத்தாள்களை கைப்பற்றியுள்ளனர்.

போலி கடனட்டைகள், வைரம் பதிக்கப்பட்ட நகை என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வேரறுக்கும் வினையின் உத்தியை அரங்கேற்றுவதற்கான முனைப்பா...?

தமிழ் மக்களின் இன்றைய உடனடி அரசியல் விவகாரமாகத் தலை உயர்த்தி நிற்கும், இந்த நாட்டின் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதில்லை. இடம்பெறுவதில்லை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அதன் தலைவர்கள் - என்று ஏகமனதாக, நேற்றுமுன்தினம் முடிவு செய்துள்ளனர் - தீர்மானித்து விட்டனர்.

அரசு அமைத்துள்ள தெரிவுக் குழுவின் முதலாவது கூட்டம், இம்மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பு பங்குபற்றாது என்பது அரசுக்கு ஏற்கனவே தெரிந்த விடயமே.

அரசாங்கம் முதலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி அதில்மேற்கொள்ளப்படும் முடிவை, தெரிவுக் குழுவில் ஆராய்வதே, பொருத்தமானதாக இருந்திருக்கும். ஆனால் அரசாங்கமோ சப்பாத்துக்கு ஏற்ப கால்களை வெட்டும் முனைப்பில் ஈடுபட்டுள்ளது.

அது எதனைக் காட்டுகிறது? குறி சொல்கிறது; என்றால், தமிழ் மக்கள் விரும்பும், ஏற்றுக்கொள்ளத் தக்க தீர்வை, முன்வைக்கவோ, உச்சரிக்கவோ அரசு விரும்பவில்லை என்பதன்றி வேறல்ல.

தமிழ் மக்கள் தமது அரசியல் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு இப்போதைய வழி அரசின் புதிய தெரிவுக்குழுவே என்று கருத்துரைப்போரும் உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு இது கடைசி பஸ் அல்ல; தமிழ் மக்களை அரசியல் ரீதியாகத் தோற்கடிப்பதற்கான இறுதிப் பொறி. இதனைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மறந்துவிடக் கூடாது.

2009 ஆம் ஆண்டில் முடிவுற்ற போரின் பின்னர், 13இற்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்க பான் கீ-மூன் - ராஜபக்ஷ கூட்டறிக்கையில் இணக்கம் காணப்பட்டது. இந்தியாவுக்கும் பல தடவைகள் 13 + குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டது. பின்னர் 13+ என்றால் செனட் சபை என்று முணுமுணுத்து, தமிழ் மக்கள் கேட்காத ஒன்றைத் தெரிவித்து, இந்தியா உட்பட சர்வதேசத்தைக் குழப்புவதற்கும் முயற்சிக்கப்பட்டது.

ஆனால் 13+ என்று எதனையும் தரப் போவதும் இல்லை; 13ஐக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதுமில்லை. 13இல் உள்ள முக்கிய அதிகாரங்களான பொலிஸ், காணி அதிகாரங்களை வெட்டிக் குறைத்து 13ஐ நீர்த்துப்போக வைப்பதே உள்நோக்கம்! அதற்காகவேதான் தற்போதைய நாடாளுமன்றத் தெரிவுக்குழு.

ஏற்கனவே 1987 ஒப்பந்தம், ஒஸ்லோ பேச்சில் சமஷ்டி குறித்து ஆராய கிடைத்த வாய்ப்பு ஆகியவற்றைத் தமிழர் தரப்பு தவறவிட்டது உண்மைதான். அத்தகைய வாய்ப்புகள் இனி எமக்குத் திரும்பவும் கிடைக்கப்போவதில்லை. அதனாலேயே அரசமைப்பிலுள்ள அற்ப சொற்ப அதிகாரங்களையாவது பாதுகாத்துக்கொண்டு, எமது அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை உள்ளது என்ற கருதுவோரும் எம்மத்தியில் உள்ளனர்.

தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவையும் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்துவிட்டன. ஆகவே, மணப்பெண் இல்லாத திருமணம் தான் இந்தத் தெரிவுக்குழு! அரச தரப்பினர் ஒன்றுகூடி 13ஐ நீர்த்துப்போக வைக்கப்போகிறார்கள். அதற்கு ஏன் தெரிவுக் குழு?

முன்னர், மேற்குறிப்பிட்ட மூன்று கட்சிகளும் கலந்துகொண்டாலும் தெரிவுக்குழுவின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. கூட்டமைப்புடனும் ஆலோசனை நடத்தினோம் என்று கூறவே கூட்டமைப்புக்கு அழைப்பு.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் பேச்சுகள், போராட்டங்கள், இனவாதத் தாக்குதல்கள், போர் என்று தமிழ் மக்கள் எண்ணுக் கணக்கற்ற நெருக்கடிகளைக் கடந்துவிட்டார்கள். ஆனால், இன்று மிகவும் மோசமான ஒரு கட்டத்தில் தமிழ் மக்கள் உள்ளனர்.

அதனைக் கையில் எடுத்து எந்தவொரு சர்வதேச அழுத்தத்துக்கும் பணிந்துபோகாது, அதிகார மேலோங்கித் தன்மையுள்ள தனது அழுத்தத்தை போடுவதற்கு அத்திபாரம் வெட்டுகிறது அரசு.

அனைத்துலக அரசியல் விதிகளை, மிகக் குறிப்பாக நாடுகளின் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை, அவர்களுக்குச் சேர வேண்டிய வலுவான உரிமைகளை, வல்லாதிக்கம் ஊடாக வேர் அறுக்கும் அத்தியாயம் அதி உச்சக்கொம்புக்கு ஏறிச்செல்லும் என்று எதிர்பார்க்கலாம். இந்தச் செயற்பாட்டு வினை, விரைவில் நடைமுறையாகும் என்பதற்கான ஒத்திகையை அரங்கேற்ற அரசு தீர்மானித்து உள்ளது என்பதே மிகப் பொருத்தம்.....

# தேர்தல் முடியும் வரை 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் வராது

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து

கோகுலன்

செப்ரெம்பரில் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் வரை 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்ந்து இருக்கும் . அதேபோல் அவசர சட்ட முன் வரைவு என்ற முறையில் அரசமைப்புத் திருத்தம் எதுவும் இடம்பெறவும் மாட்டாது என்பது நிச்சயமாகிவிட்டது.

தேர்தலுக்கு முன் அரசமைப்பில் திருத்தம் எதுவும் நடைபெற மாட்டாதென்ற நிலைப்பாட்டில் இனப் பிரச்சினையில் முக்கிய கரிசனையாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று தெரிகின்றது.

இந்தியத் தரப்பில் பாரதூரமாக கவலைகள் வெளியிடப்பட்டதையடுத்து தேர்தல்கள் முடிவுறும் வரை 13ஆவது திருத்தத்தை அதன் மூல வடிவிலேயே வைத்திருப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கிடையில் வரும் வியாழக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லிக்கு அவசரமாகப் போகவிருக்கிறார். அங்கு இலங்கையின் இப்போதைய நிலைப்பாடு குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவார் என்று தெரிகின்றது. செப்ரெம்பரில் நடைபெறவிருக்கும் வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டையும் பொறுத்து அமைச்சரின் புதுடில்லிப் பயணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன் ஆகியவர்களை அவசியம் சந்திக்கவிருப்பதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் பஸில், 13ஆவது அரசமைப்புத்திருத்தம் தொடர்பாகவும் இங்குள்ள அரசியல் சூழ்நிலை குறித்தும் அவர்களுக்கு விளக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். அமைச்சர் பஸிலின் பயணம் இந்தியாவின் அழைப்பின் பேரிலேயே இடம்பெறுவதாகவும், 13 ஆவது திருத்தம் தொடர்பாக இலங்கை பகிரங்கமாகவே சில பல நடவடிக்கைகளை எடுத்து வருவது தொடர்பாக இந்தியா தனது கவலையை வெளியிட விரும்புவதாகவும் கூறப்படுகின்றது. இலங்கை அரசின் தலைவர்கள் சிலர் அதிகார பூர்வமாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் குறித்து இந்தியத் தலைவர்கள் வினவவிருக்கிறார்கள் என்று தெரிகின்றது.

இந்திய தேசிய பாதுகாப்புத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் இங்கு வருவதற்கு முன் இது நடைபெறவிருக்கிறது. அவர் வருகை இலங்கை- இந்தியா- மாலைதீவுகள் பிராந்திய பாதுகாப்புத் தொடர்பானது என்றாலும் அதைத் தொடர்ந்து இலங்கையில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பான இந்தியாவின் கவலைகளையும் இங்கு வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன் சானியாவுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டுவிட்டு திரும்பியதன் பின்னர் வடக்கு மாகாண சபையை நிறுவுவதற்கான பிரகடனத்தில் ஜூலை 5 ஆம் திகதி கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதே சமயம் தேர்தலை நடத்தி முடிக்கும்படி தேர்தல் ஆணையாளருக்கும் பணிப்புரை விடுப்பார். தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் ஜூலை 15 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரையில் நடைபெறும். வாக்களிப்பு செப்ரெம்பர் 27 ஆம் திகதி நடை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்கா, ஐ.நா. மற்றும் பல நாடுகளுக்கு ராஜபக்ஷ அளித்துள்ள வாக்குறுதிகளின் படி இது நடைபெற விருக்கின்றது.

### ஆலோசனைகளை தான் தெரிவுக் குழு வழங்கும்

அவசரமான திருத்தங்களுக்குப் பதிலாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றங்கள் செய்வது தொடர்பான சில ஆலோசனைகளை பரிந்துரை செய்யும் என்று தெரிகின்றது. தெரிவுக் குழுவில் அரசு தரப்புப் பிரதிநிதிகள் மட்டுமே இருக்கிறார்கள். சகல எதிர்க் கட்சிகளும் அதில் கலந்து கொள்வதில்லையென்று முடிவு செய்திருக்கின்றன. இந்தக் குழுவுக்கு தலைமை வகிப்பவரான அமைச்சர் சிறிபால டி சில்வா ஜூலை 9 ஆம் திகதி குழு கூடுவதற்கு முன்பதாகவே அதன் செயற்பாடுகளை ஆதரித்து சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். குண்டசாலையில் ஒரு கூட்டத்தில் பேசிய அவர் அதிகார பரவலாக்கத்தினால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. வளங்களைப் பகிர்ந்தளிப்பது தான் முக்கியம் என்று கூறியிருக்கிறார்.

13 ஆவது திருத்தம் எங்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று. இது பற்றி ஆலோசிக்க வேண்டிய காலம் பிறந்துள்ளது. முன்பு எமக்கு பலமில்லாமையால் அச்சம் கொள்ள நேர்ந்தது. இப்பொழுது இதுபற்றி விவாதிக்க முடியும். அதனால் தான் ஜனாதிபதி இதனை தெரு வீதியில் தர்க்கித்து முடிவுக்கு வரமுடியாது. ஓர் ஒருமித்த உடன்பாட்டுக்கு நாம் வரவேண்டும் அதற்காகத்தான் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை உருவாக்கியுள்ளோம். ஈழம் வேண்டும் என்று யாரும் கூறினால் செயற்படுத்தாவிட்டாலும் அதனை நாம் காது கொடுத்து கேட்போம். அதிகாரம் பலப்படுத்தப்பட வேண்டும் என்று யாரும் கூறினால் அதற்கும் செவிமடுப்போம். ஆனால் கருத்தொற்றுமையே தெரிவுக் குழுவில் அவசியம். அதுவே ஏற்றுக் கொள்ளப்படுவதாய் இருக்கும் என்று அமைச்சர் சிறிபால டி சில்வா கூறினார்.

### 2014 இல் ஜனாதிபதி தேர்தல்

தெரிவுக்குழுவின் முடிவு எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில் 18 முழு அமைச்சர்களும் ஒரு பிரதி அமைச்சரும் வேறு ஒரு விடயம் குறித்து ஆலோசித்து வருகிறார்கள். அது என்னவென்றால் ஜனாதிபதி தமது பதவியில் நான்கு வருடங்களுக்குப் பதிலாக மூன்று வருடங்கள் இருந்த பின் மீண்டும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வது தொடர்பான விடயம். அது சாத்தியமானால் 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் ஒன்றை நாம் எதிர்பார்க்கலாம். இதனை கருத்தில் வைத்துக் கொண்டு நவம்பர் மாதத்தில் மக்கள் நலன் சார்ந்த வரவு செலவுத் திட்டம் ஒன்றை முன்வைக்க அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள்.

அரசமைப்புக்கான எல்லா திருத்தங்களையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிவிடலாம் என்று அரசு தரப்பு எதிர்பார்க்கின்றது. இருந்தாலும் ரவூப் ஹக்கீம் , வாசுதேவ நாணயக்கார, டி.ஈ.டபிள்யு.குணசேகர, ராஜித சேனாரட்ண மற்றும் திஸ்ஸ விதாரண முதலிய அமைச்சர்கள் 13 ஆவது திருத்தத்தை மாற்றக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதோடு அவர்களுடன் சில எம்.பிக்களும்சேர்ந்து கொள்வார்கள் என்ற நிலைப்பாடு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது. இதனால் எதிர்க்கட்சிகளில் இருந்து குறைந்தது ஆறு உறுப்பினர்களையாவது அரசு பக்கம் இழுத்துக் கொள்வதற்கு திரை மறைவு முயற்சி நடக்கிறது. இவர்களில் மூவர் ஐ.தே.கவிலிருந்தும் இன்னொரு கட்சியிலிருந்து மூவரும் மாறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்வது அவ்வளவு கடினமில்லை. அதனை என்னிடம் விட்டுவிடுங்கள் என்று ஜனாதிபதி தமது கட்சித் தலைவர்களிடம் கூறி வைத்திருக்கிறார்.

### பொலிஸ் அதிகாரம் பற்றிய அச்சம்

அண்மையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டமொன்றில் அமைச்சர்கள் நாணயக்கார, குணசேகர ஆகியவர்களும் அழைப்பின் பேரில் கலந்து கொண்டிருந்துள்ளார்கள். இந்தக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கூன் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து அறிக்கையொன்றை வழங்கி உரை நிகழ்த்தினார். கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முதலியவர்களும் கலந்து கொண்டார்கள். இதுபற்றி நாணயக்கார கூறுகையில், பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதன் விளைவுகள் பற்றி பொலிஸ்மா அதிபர் எடுத்துக்கூறினார். மாகாண பொலிஸ்ஆணைக்குழுஇல்லாதநிலையில் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லையென்று நான் எடுத்துக்கூறினேன் என்றார். இந்த வகையில் சகல கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தாக்கல் செய்த அறிக்கையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், என்று தாம் தெரிவித்ததாக நாணயக்கார கூறினார். மேற்படி குழுவானது நீண்ட மாநாடுகளுக்குப் பின்னர் தமிழ் பிரச்சினை தீர்வுக்கான ஆலோசனைகளை தெரிவித்திருந்தது.

கடந்த வாரம் அமைச்சர் ராஜித சேனாரட்ண நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்தில் ரெஜினால்ட் குறே, வாசுதேவ நாணயக்கார, டி.ஈ.டபிள்யு.குணசேகர முதலியவர்களும் கலந்து கொண்டார்கள். அங்கு குணசேகர கூறியதாவது:- மக்கள் கருத்து அறியாமல் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டதாக சிலர் கூறுகிறார்கள். எந்தத் திருத்தம் மக்கள் விருப்பத்துடன் கொண்டு வரப்பட்டது என்று கேட்கின்றேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் கூட மக்கள் கருத்து அறியாமல் கொண்டு வரப்பட்டதே. தமிழ்மொழி அங்கீகரிக்கப்படுவதற்கு 30 வருடம் பிடித்து, அதனை செயற்படுத்துவதற்கு 30 வருடம். நானும் வாசுதேவாவும் தான் அதனை நடைமுறைப்படுத்த முக்கிய பங்கெடுத்தோம். அதனால் சிங்களமொழி மறைந்து போய்விட்டதா என்று கேட்டார்.

# அச்சம் என்பதே வாழ்வாக...



ராஜராஜன்

அச்சம் என்பது மடமை யடா அஞ்சாமை திராவி டர் உடைமையடா' என்ற பாடல் வரிகள் இன்னமும் எமது காதுகளில் ஒலிக்கின்றன.

ஆனால் நாமோ எடுத்ததற்கெல் லாம் அச்சப்படுகின்றோம். எதனைக் கண்டாலும் பயத்தில் உறைந்து நிற்கின்றோம். ஏன் இந்த நிலை? எமது துணிவும் அச்சத்தை விரட்டும் இயல்பும் எங்கே போய்த் தொலைந்து விட்டன?

இரவு வேளையில் தெருக்கோடியில் இருக்கும் நாய் குலைத்தால்கூட இன்று நாம் பரபரப்பு அடைகின்றோம். யாரோ முகம் தெரியாதவர்கள் எமது வீட்டுக்குள் புகுந்து விட்டதைப் போன்று பயத்தில் ஆழ்ந்து விடுகின் றோம். விழி பிதுங்க, உடல் வியர்க்க, வார்த்தைகள் வெளிவராத நிலை யில் சங்கடப்படுகின்றோம்.

இதையொரு மனம் சம்பந்தமான கோளாறு என்று கூறலாம். அந்த நிலைக்கு நாம் இட்டுச் செல்லப்பட் டிருக்கின்றோம்.

உண்மையான ஜனநாயக நாடொன் றில் அந்த நாட்டுப் பிரசைகளின் சகல சுதந்திரங்களும் பாதுகாக்கப் படல் வேண்டும். அவர்களுக்கு எந்தவித இடர்களும் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ளுதல் ஆட்சியில் இருப்பவர்களின் முக்கிய பணியாகும். ஆனால் இங்கு இது கடைப்பிடிக்கப்படுகின்றதா என்றால் இல்லையென்ற பதில்தான் எஞ்சி நிற்கும்.

இரவு வேளைகளில் வீட்டின் ஜன் னல்களைத் திறப்பதற்குக் கூட எமக்குப் பயம் எவனாவது அல வாங்குடனோ உலக்கையுடனோ வந்து ஜன்னல் கம்பிகளை வளைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்து விடு வானோ என்ற அச்சம் ஏனென்றால் இத்தகைய சம்பவங்கள் எமது பகுதி யில் தாராளமாக இடம்பெறுகின்றன. வீட்டு வளவின் எங்கோ ஒரு மூலை யில் நிற்கும் தென்னை மரத்திலி ருந்து பழுத்த தேங்காயொன்று விழும் போது கூட எமது இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. மறுநாள் காலை யில் அந்தத் தேங்காயைப் பார்த்த பின்னர்தான் எமது இதயத்தின் படபடப்பு அடங்கி விடுகின்றது.

கடந்த 30 வருடங்களாக நீடித்த போரும் அதனால் இடம்பெற்ற பயங் கர நிகழ்வுகளும் எமது மனங்களி லிருந்த துணிவை அறவே வழித் தெடுத்து விட்டன. நாம் கோழைகளாக மாறிப்போய் விட்டோம். இல்லை... இல்லை... கோழைகளாக மாற் றப்பட்டு விட்டோம்.

கொலை, கொள்ளை, அடாவடித் தனம், ஏமாற்று வேலைகள், வஞ்ச கம் என்பன நிறைந்த ஒரு சமுதாய அமைப்பிலே வேறு வழியின்றி ஒட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவல நிலை எமக்கு. அநியாயத்தைத் தட்டிக்கேட்க முற்பட்டால் மறுநாள் சுடுகாட்டுக்குத்தான் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை. வாள்கள், கிரிக்கெட் மட்டை கள் மற்றும் பொல்லுகள் என்பன ஆயுதங்களாக மாறிவிட்டன. எத்த கைய பய உணர்வுகளுமின்றி தமது இலக்குகளைத் தேடியழிக்கும் மிருகங்களையொத்த கும்பல்கள் சுதந்திரமாக உலவுகின்ற இந்த சமுதாயத்திலே அச்ச உணர்வு பெரு கிக் காணப்படுமே தவிர துணிவு ஒருபோதுமே தலையைக் காட்டாது.

இரவு வேளைகளில் அயல் வீட்டில் எழும் அவலக் குரல் கூட எம்மை உசுப்பி விடுவதில்லை. மாறாக மௌன சாமிகளாக அடங்கிக் கிடந்துவிட்டு விடிந்த பின்னர் ஆறுதலாக அங்கே என்ன நடந்ததென்பதை ஆராயக் கிளம்பி விடுகின்றோம். நாளைக்கு எமக்கும் இந்தக் கதிதான்.

30 ஆண்டு கால போரின் போது அப்போது சிறுவர்களாக இருந்தவர்கள் தமது வாழ்வைத் தொலைத்துவிட்டுத் தவித்தார்கள். இன்று போர் ஓய்வு பெற்றதும் அவர்களது சந்ததியினர் அதையே அனுபவித்து வருகின்றனர்.

முன்பள்ளிக்குச் செல்லும் பால் மனம் மாறாத பச்சிளம் பெண் குழந்தைக்கும் இன்று பாதுகாப்புத் தேவைப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வயது வந்த பெண் பிள்ளை களுக்குத்தான் இந்த நிலை இருந் தது. முன்பள்ளிக்குப் பிள்ளை களை அனுப்பி வைப்பதே இன்று பெரும் சுமையாக மாறிவிட்டது.

கழுத்தில் கவரிங் நகைகளை அணிந்து கொண்டு செல்வதற் கான உரிமை கூட இப்போதுள்ள பெண்களுக்கு இல்லை. சொக்கத் தங்கமும் கவரிங் நகைகளும் வேறுபாடின்றி ஒளிர்வதால் இந்த வினை வெறுங்கழுத்துடன் சென்றால் தங்க நகைகள் எங்கேயென உரிமை யுடன் கேட்டு வதைக்கும் படலம் வேறு. பெண்கள் என்னதான் செய்வது?

முன்பெல்லாம் திருடுவதற்கென வருபவர்கள் வீட்டில் உள்ளவர்கள் விழித்து விட்டால் குடல் தெறிக்க ஓடித் தப்பி விடுவார்கள். இவர்கள் தமது தொழிலை நேர்மையாக மேற்கொண்டு வந்த உத்தமர்கள் என்றே கூறி விடலாம். தமக்குத் திடுருவதற்கான சந்தர்ப்பம் கிடைக் காது விட்டால் மேற்கொண்டு எதனை யும் தொடாது மறைந்து விடும் பண்பு இவர்களிடத்தில் நிறைந்திருந்தது.

ஆனால் இப்போது திருடன் யார்? கொள்ளையன் யார்? என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. திருடுவதற்கென வருபவனே தனது நோக்கம் நிறைவேறாதுவிட்டால் ஆயுதங்கள் சகிதம் கொள்ளையனாக மாறி விடுகின்றான். இதனால் திருடர்களைத் துரத்தி விடுவதற்கான துணிவு எம்மிடம் இருப்பதில்லை. வந்தவனும் தனது காரியத்தைக் கச்சிதமாக முடித்துவிட்டு வெளியேறி விடுகின்றான். எமது பலவீனத்தை வந்தவன் உணர்ந்து கொள்வதால் பயம்எதுவும்அவனுக்குஏற்படுவதில்லை.

இந்த நிலை இங்கு நீடிக்குமாயின் மிகப் பயங்கரமானதொரு எதிர் விளைவை நாம் சந்திக்க நேரிடும். மக்கள் துணிவுடன் அநியாயங் களை எதிர்ப்பதற்குக் கிளம்பிவிட் டால் எதனையும் முறியடித்துவிட முடியும். இதற்குப் பல நாடுகளில் நிகழ்ந்த சம்பவங்கள் உதாரணமா கக் கூறலாம்.


ஈரானில் கொடுங்கோலாட்சியை மேற்கொண்டிருந்த மன்னார் ஷா மக்களின் எதிர்ப்புகளை எதிர்கொள்ள முடியாது நாட்டைவிட்டு தப்பியோ டினார்.

கொடுங்கோலனான உகண்டா ஜனாதிபதி இடி அமீனுக்கும் இதே கதிதான்நேர்ந்தது. லிபியா, எகிப்து ஆகிய நாடுகளிலும் இதே நிலை நேர்ந்தது. மக்கள்ஒற்றுமையுடன்ஒன்றிணைந்து துணிவுடன் தமக்கு நேருகின்ற அநி யாயங்களை எதிர்த்துப் போராட வேண்டும். ஆரம்பத்தில் சில இழப் புக்கள் ஏற்படலாம். ஆனால் இறுதி யில் வெற்றியே கிடைக்கும்.

ஆகவே நாம் முதலில் எமது மனதில் படிந்திருக்கும் அச்ச உணர்வுகளைப் போக்க வேண்டும். எதனையும் பயமின்றி அணுகும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். கோழை கள் தினமும் சாவை எதிர்கொள்வர். வீரன் ஒரு முறைதான் சாவான் என்பதை தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்தச் சமூகத்தை துவம்சம் செய்யவெனக் கிளம்பியுள்ள கொடியவர்கள் இருந்த இடம் தெரியாது மறைந்து போவர்.

---

# படித்தல் ஒரு கலை



அருவி

மூன்று மணி நேரம்தான். அதற்குள் கேட்பவற்றை சிறப்பாக எழுதி முடித்து விட வேண்டும். முழு மதிப்பெண்ணை எடுத்தால்தான், நினைத்த மேற் படிப்பைத் தொடர முடியும்.

இந்த கல்விமுறையால், மாணவர் களுக்கு ஏற்படும் மனஅழுத்தங் களுக்கு அளவேயில்லை. வெறு மனே பரிட்சைக்குத் தயாராகும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் மன அழுத்தம் ஏற்படுவதில்லை. பல்கலை மாணவர்கள், போட்டித் தேர் வுக்கு படிப்பவர்கள் என அனைத்து தரப்பினருக்குமே, படிப்பு தொடர் பான மன அழுத்தங்கள் உண்டு.

எனவே, இங்கே படிப்பது என்பது தான் முக்கிய அம்சம். இப்பொழுது உயர்தர மாணவருக்கான தேர்வுக் காலம் நேருங்குகின்றது. எப்படிப் படித்தல் என்கின்ற இந்தக் கலையை பின்பற்றநீங்களும்முயற்சிசெய்யலாம்.

## பொருத்தமான நேரம்

படிப்பதற்கென்று, இதுதான் பொருத் தமான நேரம் என்பதெல்லாம் இல்லை. நமக்கு எந்த நேரம் வசதி யாகவும், உற்சாகமாகவும் படுகிறதோ, அந்த நேரத்தையே, படிப்பதற்கு தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பொதுவாக, இரவு 10.30 மணிக்கு மேல் உலகம் அமைதியாக இருக்கும். சிலருக்கு அந்த நேரம் மிகவும் பிடிக்கும்.

சிலருக்கு அதிகாலை 3 மணி அல் லது 4 மணிக்கு எழுந்து படிப்பது பிடிக்கும். சிலருக்கு, நண்பகல் வேளை யில் படிப்பது பிடிக்கும். எனவே, இது அவரவர் உடல்நிலையையும், விருப்பத்தையும் பொறுத்தது. இது தான் சிறந்த நேரம் என்றெல்லாம் எதுவும் இல்லை.

## ஆரம்பத்திலிருந்தே படிக்கத் தொடங்குதல்

மாணவர்கள் தினந்தோறும் வகுப்ப றைகளில் பாடங்களை கற்பிக்கும் போதே அவற்றை அன்றன்றாடம் கற்று முடித்துவிட வேண்டும். சில மாணவர்கள் தேர்வு நெருங்கும் நேரம்வரை அலட்சியமாக இருந்து விடுவார்கள். தங்களின் புத்தகங்க ளையே தொடமாட்டார்கள். தேர்வுக்கு இன்னும் சில நாள்களே இருக்கின் றன எனும் நிலை வரும்போதுதான், பலர் படிக்கவே தொடங்குகின்றனர். இதனால், பலர், மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.. எனவே, ஆரம்பத் திலிருந்தே வழங்கப்பட்ட பாடப்புத் தகங்களை படிக்கத் தொடங்கிவிட வேண்டும். அப்போதுதான் இறுதி நேரத்தில்திருப்புதலை மேற்கொண்டு, சிறப்பாக எழுதி, அதிக மதிப்பெண் களைப் பெற முடியும்.

என்னதான் கடினமாக உழைத்தா லும், திட்டமிட்டு உழைப்பவனே வெற்றியடைவான் என்பது பிரபல மான அறிவுரை மொழி. அதற்கேற்ப, என்னதான் அதிகநேரம் படித்தா லும், திட்டமிட்டு, தெளிவான புரிதலு டன் படித்தால்தான் பயன் கிடைக் கும்.

இந்த நாளுக்குள் இந்தப் பாடத்தை முடித்துவிட வேண்டும் மற்றும் இதை இத்தனைமுறை திரும்ப திரும்ப படிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

படிக்கும்போது முக்கியமான குறிப் புகள் என்று தோன்றுபவைகளை பென்சில் மூலம் அடிக்கோடிட்டுக் கொண்டால், அவற்றை திரும்பப் படிக்கும்போது எளிமையாக இருக் கும்.

## போதுமான இடைவெளி

படிக்கையில், தொடர்ந்து பல மணிநேரங்கள் ஒரே இடத்தில் அமர்ந்து படிக்கையில், சோர்வு ஏற்படுவதை தவிர்ப்பது கடினம். எனவே, தேவைப் படும் நேரத்தில், சிறிய சிறிய இடைவெளிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து உட்கார்ந்து படிக்காமல் சிறிதுநேரம் நடந்து கொண்டு படிக்கலாம். சிறிதுநேரம் கீழே அமர்ந்துகொண்டோ அல்லது மேசையைப் பயன்படுத்தியோ படிக்க லாம். இவ்வாறு மாறி மாறிச் செயல் பட்டு, நமது சோர்வை விரட்டலாம். வழக்கமாக படுக்கும் கட்டிலின் மீது, இரவில் அமர்ந்து படிப்பதை தவிர்ப் பது நல்லது. ஏனெனில், பலருக்கு, இரவில் அதன்மீது அமர்ந்து படிக்கையில், விரைவில் தூக்க உணர்வு ஏற்படும்.

## எவ்வளவு மதிப்பெண்?

தேர்வுக்கு படிக்கும்போதே, குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண் எடுத்தால் போதும், 60 எடுத்தால்போதும் அல்லது 80 எடுத்தால்போதும் என்று நினைத்துப் படிப்பது பெரும் தவறு. முடிந்தவரை, அனைத்து விஷயங் களையும் படிக்க் வேண்டும். முழு மதிப்பெண்களுக்கு குறிவைத்து எழுத வேண்டும். இப்படியாக படித்தல் கலையைப் பினபற்றிப் பாருங்கள் வெற்றி உங்களுக்கும்சொந்த மாகட்டும்.

உதயன்
01/07/2013

# வாழ்க்கை
## 11 ஒரு வரைபடம்



■ நிவேதிதா மோகன்.

கல்லூரி முடித்து வீட்டிற்கு வேண்டா வெறுப்புடன் வந்த நிலாவால், அந்த வீட்டின் கோலத்தைக் கண்டு நம்பவே முடியவில்லை. வீட்டில் இருந்த பொருள்கள் எல்லாம் அங்கும் இங்கும் என்று அலங்கோலமாக இருந்தன. வீட்டின் கோலம் கண்டு திகைத்து நின்றாள் நிலா.வீட்டில் எந்தச் சத்தமுமே இல்லை.வீட்டின் மின்விளக்குகள் உடைந்திருந்தன. சுவரில் மண் கறை என எல்லாமே நிலாவைப் பதற வைத்தது. வீட்டில் யாராவது இருக்கிறார்களா? என்று தேடிக்கொண்டு போகையில் ஆகாஷ் மேசைக்குக் கீழே அழுது கொண்டு ஒளிந்திருந்தான். உடனே நிலா அவனை கட்டி அணைத்து கொண்டு என்ன நடந்தது ? அம்மா எங்க செல்லம் என்று கேட்கையில் ஒன்றுமே பேசாமல் அவன் மேலே கையைக் காட்டினான்.

ஆகாஷை அழைத்துக் கொண்டு படி வழியாக மேலே சென்றாள் நிலா. அங்கு நிலாவின் சித்தி கட்டிலிலேயே அழுது கொண்டு படுத்திருந்தார். நிலாவைக் கண்டதும் கோபத்தில் கொதித்தெழுந்த யமுனா போடி வெளிய, உன்னால தான் எல்லா பிரச்சனையுமே. கல்யாணம் செய்து 10 வருடம் ஆகியும் என்னை ஒரு நாள் கூட என் புருஷன் அடித்தது கிடையாது. ஆனால் இன்று உன்னால் தான் இந்த நிலைமை. அண்ணன் மகள்! அண்ணன் மகள்! என்று தலையில் தூக்கி வைத்து ஆடுறார். போடி வெளியே ! இனிமேல் உனக்கு இந்த வீட்டில் இடம் கிடையாது என்று அவளை வெளியில் அடித்து துரத்திக் கதவை பூட்டி விட்டாள் யமுனா.

இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கு செல்வதென்று தெரியாமல் தெருத் தெருவாய் கண்களின் கண்ணீர் வழிய வழிய நடந்து கொண்டிருந்தால் நிலா. கண்ணீரை மறைக்க மழை பெய்தது.

மழையில் இருந்து ஒரு கடையருகில் ஒதுங்கினாள் நிலா. சித்திக்கு ஏன் என்னைப் பிடிக்கவில்லை, நான் என்ன பிழை செய்தேன்? என்று பல கோணங்களில் யோசித்துக் கொண்டிருந்தாள். இவ்வாறு யோசித்து கொண்டிருக்கையில் நிலாவை யாரோ பார்த்துக் கொண்டிருப்பது போல ஒரு உணர்வு. ஓரக் கண்ணால் அருகில் இருந்தவரைப் பார்த்தாள் நிலா, அப்போது அங்கு நின்ற நபர். நீங்கள் தமிழா? என்று ஒரு சந்தேகத்தோடு கேட்க நிலாவும்

ஆமாம் என்று தலையை அசைத்தாள். உடனே அவர் இந்த நேரம். இங்கே தனியாக என்ன செய்யிறிங்கள்? என்றார் அவர். நிலா நடந்தவற்றைக் கூறினாள்.அதற்கு அவர் நான் ஒரு வழக்கறிஞர், உங்களுக்கு நான் உதவி செய்கிறேன் என்று கூறி நிலாவை நிலாவின் கல்லூரிக்கு அழைத்துச் சென்று அவளின் கல்லூரி முதல்வருடன் கதைத்து அவளை கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் வசதியும் செய்து கொடுத்து அவள் கையில் உதவிக்கு ஒரு தொலைபேசியையும் கொடுத்தார். நிலாவால் அவர் செய்த உதவிக்கு எப்படி நன்றி கூறுவதென்று தெரியவில்லை. அந்த அற்புத மனிதர் நிலாவிடம் ஏதாவது தேவை என்றால் அவரை அழைக்குமாறு கூறிச்சென்று விட்டார். பின் நிலாவின் கல்லூரி முதல்வர் நிலாவை அவளின் நண்பர்களின் அறையில் இன்று முதல் தங்கிக் கொள்ளலாம் என்று கூறியவுடன் நிலாவால் அவள் சந்தோசத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. நிலா ஓடிப்போய் அவளின் நண்பி ஜெனியின் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்து பார்த்த ஜெனிக்கு சந்தோஷத்தில் பேச்சே வரவில்லை.பின் நிலா நடந்த எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினாள். ஜெனியும் சந்தோஷமாக அவளை வரவேற்றாள். (தொடரும்)

# இதுவும் வன்முறைதான்...

பெண்களின் மீதான வன்முறை என்ற சொல் நம் காதில் விழுந்தவுடன், குடிகாரக்கணவன் மனைவியின் கூலிப்பணத்தைக் கேட்டு அடித்து உதைக்கிற காட்சிதான் நம் கண்களில் தோன்றுகிறது. மாறாக, ஏழே நாள்களில் சிவப்பழகு என்று பெண்களுக்கான முகத்தில் பூசும் கிறீம்களின் விளம்பரம் நம் கண்களில் தோன்றுவதில்லை. உண்மையில் முதலாவதை விட இரண்டாவதிலேதான் அதீத வன்முறையும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகம். சிவப்புத்தான் அழகு என்பதும், அழகுதான் பெண்களுக்கான தேவை என்பதைக்காட்டிலுமான வன்மம் வேறென்னவாக இருக்க முடியும்? அழகுதான் பெண்களின் அடிப்படைத்தேவை என்றால், அறிவும் அன்பும் மட்டுமே நிரம்பிய பெண்களுக்கு சமூகத்தில் இடம் கிடையாதா? என்கிற கேள்வி எழுகிறது. இதுவும் பெண்கள் மீதான வன்முறைதான்.

■ பி.சுபோ



# வாழவிடுங்கள்...

■ சு.சாரங்கி

வில்லொடித்து
மணக்கவில்லை
என்பதால் விலகித்தான்
போனாயோ
மாதவி வீட்டுக்கு
வழியனுப்ப
கண்ணகியாக நானிருப்பேன்
நினைத்தாயோ
எப்பொழுது உனக்கு
என்னை பிடிக்காமல்
வேறொருத்தி பிடித்ததோ
மரணிக்க முயற்சித்தேன்
தோற்றுவிட்டேன்
ஆதலால் மறக்கத்
துணிந்துவிட்டேன்
உன்னிடம் ஒரேஒரு கேள்வி
இன்று வரை என்னைக்
கொல்லும் கேள்வி
என்னை எங்கே உனக்கு
பிடிக்காமல் போனது?
இங்கே தவறாக யாரேனும்
நினைக்கலாம்
அவர்களுக்கு ஒரே வார்த்தை
என் வாழ்க்கை விரயமாகிக்
காயப்பட்டு போயிருக்கிறேன்
என் மனதைக் கொய்தவன்
முன் வாழ விரும்புகிறேன்
வாழவிடுங்கள்..



# தங்கள் அவலநிலையை தீர்க்குமாறு சிலாவத்துறை மக்களால் மனு

## முசலி பிரதேச சபை தலைவருக்கு

சிலாவத்துறை, ஜூலை 1
சிலாவத்துறையில் மீள் குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் தமது அவல நிலையைத் தீர்க்குமாறு கோரும் மனு ஒன்றை கடந்த புதன் கிழமை முசலி பிரதேச சபைத் தலைவர் அப்புல் பகாத் எகியானிடம் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டில் நாட்டில் தோன்றிய அசாதாரண நிலை காரணமாகச் சிலாவத்துறை மக்களாகிய நாம் புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றோம்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற நிலையில் நாம் திரும்பி வந்து பார்த்த போது எமது காணிகளை கடற்படையினர் அபகரித்து வைத்திருந்தனர்.

இருந்த போதிலும் மாற்று ஏற்பாடாக அரசினால் 20 பேர்ச் காணி வழங்கப்பட்டது. அதில் நாம் குடியமர்ந்துள்ளோம். இங்கு 25 ற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் உள்ளனர்.

நாம் அனைவரும் அன்றாடம் எமது சிறிய வருமானத்தைக் கொண்டே பிள்ளைகளின் கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளைச் சமாளித்து வருகின்றோம்.

நாம் மலசலக் கூட வசதிகள் இல்லாததால் காடுகளை நாட வேண்டிய அவலநிலையில் உள்ளோம்.

ஆனால் காட்டுக்குள் செல்லும் போது பெண்கள் அச்சமடையும் நிலை காணப்படுகின்றது.

மேலும் கண்ட இடங்களிலும் மலசலம் கழிப்பதால் சுகாதாரக்கேடுகள் தோன்றியுள்ளன. எனவே எமக்கு மலசல கூட வசதியை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் இன்னமும் தற்காலிகக் கொட்டகைகளில் தான் வாழ்ந்து வருகின்றோம். இவை கூட சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

எமக்கு நிரந்தர வீடுகள் தற்போது வழங்கப்படாது விட்டாலும் நாம் ஒதுங்கும் வகையிலாவது தற்காலிக கொட்டகைகளைச் சீர் செய்து தருமாறு கேட்டு நிற்கின்றோம்.

மேலும் வீதி, மின்சார வசதிகளும் எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை. இவற்றையும் ஏற்படுத்தித் தரவும்- மிக முக்கியமாக குடிதண்ணீர்ப் பற்றாக்குறையும் எம்மை வாட்டுகின்றது- இதனை வழங்குவதற்கும் ஆவன செய்யவும் என்றுள்ளது. (க-12)

> "2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற நிலையில் நாம் திரும்பி வந்து பார்த்த போது எமது காணிகளை கடற்படையினர் அபகரித்து வைத்திருந்தனர்.

# இடம் மாறப்போகும் நிரந்தர வீடுகள்

## சின்னப்பல்லவராயன்கட்டில் அவல நிலை

அக்கராயன், ஜூலை 1
பூநகரி சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் அமைக்கப்படவிருந்த நிரந்தர வீடுகள் இங்கு அமைக்கப்படாது வேறு இடங்களுக்கு இடம்மாறும் நிலை உருவாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கிராமத்தில் முதற் கட்டமாக 25 நிரந்தர வீடுகள் அமைக்கப்படுமென ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் காணியில்லாத இந்தக் குடும்பங்களுக்குரிய காணி இதுவரை வழங்கப்படாமையால் இந்த நிலை தோன்றியுள்ளது.

மேலும் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு முன்வந்த உதவி நிறுவனம் கிராம மக்களிடம் நேரில் சென்று வீடுகளை அமைப்பதற்குரிய காணிகளை அவர்கள் இனங்காட்டாது விட்டால் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய வீடுகள் வேறு இடங்களுக்கு மாற்றப்படவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் சுமார் 48 குடும்பங்கள் பாதிக்கப்படப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சின்னப்பல்லவராயன்கட்டிலுள்ள தென்னங் காணியில் தலா அரை ஏக்கர் வீதம் இந்தக் குடும்பங்களுக்கு காணி வழங்கப்படுமென ஏற்கனவே வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இழுபறி நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### தூசுப் படலங்களால் கேடுகள்

அக்கராயன், ஜூலை 1
கிளிநொச்சி நகரில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகளின்போது பெருமளவு தூசுப் படலம் கிளம்புவதால் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன.

இங்கு ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் கனகபுரம் வீதிப் புனரமைப்புப் பணிகள் என்பன இடம்பெற்று வருவதால் பெருமளவு தூசு கிளம்புகின்றது.

இதனால் வீதியோரங்களில் வைத்து விற்கப்படும் பழங்கள் தூசு படிந்து காணப்படுகின்றன.

மேலும் திறந்த நிலையில் வைத்து விற்கப்படும் உணவுப் பொருள்களிலும் தூசு படிந்து சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தி வருகின்றது.

எனவே வீதியோரத்தில் வைத்து உணவுப் பொருள்கள் விற்கப்படுவதைத் தடை செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# மரங்களை கடத்தும் முயற்சி பொலிஸாரால் முறியடிப்பு



நெடுங்கேணி, ஜூலை 1
நெடுங்கேணி பட்டறை பிரிந்த குளம் பகுதியிலிருந்து சட்டவிரோதமான வகையில் மரங்களை வெட்டிக் கடத்தியவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களால் பட்டறை பிரிந்தகுளம் காட்டுப் பகுதியில் முதிரை, பாலை ஆகிய பெறுமதி வாய்ந்த மரங்கள் வெட்டப்பட்டு தீராந்திகளாக அரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அவை நள்ளிரவு 2 மணியளவில் லொறியொன்றில் ஏற்றப்பட்டு நெடுங்கேணிப் பகுதியிலிருந்து கடத்திச் செல்வதற்கு முயற்சிக்கப்பட்டது. லொறியைக் கண்டதும் நெடுங்கேணிப் பொலிஸார் அதனை மறித்து சோதனையிட்டனர். அதன் போது மரங்களைக் கடத்தும் முயற்சி அம்பலமானது.

இந்தத் தகவல்களை நெடுங்கேணி உதவிப் பொலிஸ் பரிசோதகரான சரத் சிசிர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# சுவையில்லாத மதிய உணவு மன்னார் மாணவர்களுக்கு

மன்னார், ஜூலை 1
மன்னார் மாவட்டத்திலுள்ள சில பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு சுவையற்றதாகக் காணப்படுவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கென உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இந்த உலர் உணவுப் பொருள்களைக் கொண்டு சமைக்கப்பட்ட மதிய உணவு தரம்-01 முதல் தரம்-09 வரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஆனால் சில பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உணவு மாணவர்கள் உண்ண முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில மாணவர்கள் குறித்த உணவை உண்ணாது வீடுகளுக்கு கொண்டு செல்கின்றனர். அதனைப் பெற்றோர் உண்டு பார்க்கின்ற போது எவ்வித சுவையும் இல்லாத நிலையில் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை சில பாடசாலைகளில் இருந்து உலர் உணவுப் பொருள்கள் வெளியில் எடுத்துச் செல்லப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. நெத்தலிக்கருவாடு, தேங்காய் எண்ணெய், பருப்பு, உருளைக்கிழங்கு உள்ளிட்ட உணவுப் பொருள்கள் பாடசாலையிலிருந்து வெளியில் எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மாணவர்களுக்கு சமைத்து வழங்கப்படுகின்ற மதிய உணவை பரிசோதிப்பதற்காக உலக உணவுத் திட்ட அதிகாரிகள் பாடசாலைகளுக்கு வருகைதந்து உணவைப் பரிசோதித்த பின்னர் மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)



# அக்கராயன் மருத்துவமனைக்கு

## நீண்ட தூரம் நடந்து செல்லும் நோயாளர்கள்

அக்கராயன், ஜூலை 1
அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு நோயாளர்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு நீண்ட தூரம் நடந்து செல்லும் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளது.

அக்கராயன் பிரதேசத்தின் ஊடாகச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் அக்கராயன் மருத்துவமனை வரை செல்லாததன் காரணமாகவே இந்த நிலை தோன்றியுள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் குடியமர்த்தப்பட்ட நாளிலிருந்து அக்கராயன் மருத்துவமனை வரை பஸ் சேவைகளை நடத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

ஆனால் ஒரேயொரு பஸ்ஸைத் தவிர ஏனைய அரச, தனியார் பஸ்கள் அக்கராயன் சந்தியில் நோயாளர்களை இறக்கிவிட்டுச் செல்வதால் சுமார் 800 மீற்றர் தூரத்தை நோயாளர்கள் நடந்து செல்ல வேண்டிய அவலம் தொடர்கின்றது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம், கோணாவில், அமதிபுரம் மக்களும் மருத்துவ மனைக்கு நடந்தே செல்வதைக் காண முடிகின்றது. (க-18)

# சிறுபோக செய்கையில் நோய்களால் குறைந்த அளவிலேயே சேதங்கள்

## முல்லை மாவட்ட விவசாயப் பகுதியினர் விவசாயிகளிடம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 1
முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்பயிர்கள் மற்றும் நிலக் கடலைப் பயிர்களில் காணப்படும் நோய்த் தாக்கம் பெரிய அளவிலான சேதங்களை ஏற்படுத்த மாட்டாதென விவசாயப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது முல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைப் பயிர்களில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கங்கள் தொடர்பாக முல்லை மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலர்களினால் முத்துஐயன்கட்டு இடதுகரையில் நடமாடும் பயிற்சி முகாம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் நடைபெற்றது. இதன் போது நோயினால் பாதிக்கப்பட்ட பயிர்களை விவசாயிகள் கொண்டு வந்து காண்பித்தனர். அவற்றை ஆராய்ந்த விவசாயப் பகுதியினர் சிறிதளவு சிற்றுண்ணித் தாக்கத்தினாலும் கடும் வெப்பம் காரணமாகவும் இந்த நோய்கள் பரவுவதாகத் தெரிவித்தனர்.

இவற்றினால் பெரிய அளவில் தாக்கம் ஏற்படாது எனவும் தெரிவித்த விவசாயப் பகுதியினர் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இங்குள்ள 32 விவசாயிகளின் வயல்களில் நோய்த் தாக்கம் காணப்படுவதாகவும், செவ்வாய்க்கிழமை தோறும் இதுபோன்ற பயிற்சி முகாம் இடம்பெறுமெனவும் விவசாயப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது. (க-500)



> விவசாயிகளால் காண்பிக்கப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட பயிர்களை ஆராய்ந்த விவசாயப் பகுதியினர் சிறிதளவு சிற்றுண்ணித் தாக்கத்தினாலும் கடும் வெப்பம் காரணமாகவும் இந்த நோய்கள் பரவுவதாகத் தெரிவித்தனர்.

### முந்திரிகைத் தோட்டங்களில் தொழில் வழங்குமாறு மனுக் கையளிப்பு

அக்கராயன், ஜூலை 1
பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள மரமுந்திரிகைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புக்களை வழங்குமாறு கோரும் மனுக்கள் ஜெயபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கிளிநொச்சி அரச அதிபர் உட்பட பலருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் பல குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜெயபுரம் கிராம மக்கள் தமக்கு வயல் நிலங்களை வழங்க வேண்டுமென நீண்ட நாள்களாகவே கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிர்க்கவும்

**இடபர்:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கடகர்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**சிங்கர்:** குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

## நாளை

ஆனி-18 செவ்வாய்க்கிழமை 02.07.2013

திதி: தசமி பி.இ. 04.50 வரை

நட்சத்திரம்: அச்சுவினி மு.இ. 09.57 வரை

சுபநேரம்: 10.26 - 11.56 வரை

இராகுகாலம்: 02.56 - 04.26 வரை

**துலாபர்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகர்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மகரர்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பர்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மீனர்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். சிலர் உங்களைக் குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்காதீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | 2 | 7 | 5 |
| | | 5 | | | 3 | | 6 | 9 |
| | | 6 | | | | 8 | 4 | |
| | | 1 | | 6 | 7 | | 3 | |
| | | 2 | | 9 | | 7 | | |
| | 3 | | 5 | 2 | | 4 | | |
| | 6 | 9 | | | | 5 | | |
| 5 | 7 | | 1 | | 2 | 6 | | |
| 1 | 4 | 8 | 9 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 7 | 3 | 1 | 4 | 2 | 5 | 6 |
| 2 | 3 | 5 | 6 | 7 | 9 | 1 | 4 | 8 |
| 6 | 4 | 1 | 2 | 8 | 5 | 9 | 3 | 7 |
| 3 | 1 | 9 | 7 | 2 | 6 | 5 | 8 | 4 |
| 4 | 7 | 2 | 8 | 5 | 3 | 6 | 1 | 9 |
| 8 | 5 | 6 | 9 | 4 | 1 | 3 | 7 | 2 |
| 7 | 9 | 8 | 1 | 3 | 2 | 4 | 6 | 5 |
| 1 | 6 | 4 | 5 | 9 | 8 | 7 | 2 | 3 |
| 5 | 2 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் வருட நினைவில்....

## அமரர் பொன்னையா சண்முகநாதன்

(இளைப்பாறிய உதவிக் கணக்காய்வாளர்,

உரிமையாளர் - எரிபொருள் நிரப்பு நிலையம், மருதனார்மடம்)

**திதி: அபரபக்க நவமி (01.07.2013)**

**அன்னை மடியில்**
**15. 06. 1929**

**ஆண்டவன் அடியில்**
**12. 07. 2012**



குடும்பத்தின் குலவிளக்காய் குவலயம் போற்ற வைத்து
இமைப்பொழுதில் எமைப்பிரிந்து இமாலயம் சென்றாலும்
கணப்பொழுதும் உமை மறவோம் – உம்
ஆத்ம சாந்திக்காய் அனுதினமும் வேண்டிடுவோம்.

புத்தூர் வீதி,
மீசாலை.

பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்.

(சீ/10150) (45.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலை மருந்தாளர்
சு. சிவசுப்பிரமணியம் அவர்களின்
பாசமிகு தாயார்

**திருமதி சுந்தரம் சுபத்திரை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(38819)
(3.6.11)

**மருந்தாளர்கள்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## அமரர் கலாநிதி மனோகரக் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்த உருவச்சிலை நிறுவுதல்

கடந்த 40 ஆண்டுகளாக எமது மன்னார் மாவட்டத்திற்கு தமது சமயப் பணிகளுடன் பல்வேறுபட்ட சமூகப் பணிகளையும் எமது மக்களுக்குவழங்கிஅமரத்துவமடைந்துள்ள

**அமரர் கலாநிதி மனோகரக் குருக்கள்**

அவர்களை நினைவுகூருமுகமாக அன்னாரது உருவச்சிலையினை மன்னார் நகரத்திலுள்ளதொலைபேசிக் கோபுரத்தின் தென்கிழக்கு மூலையில் அதாவது வைரவர்கோயிலுக்கு அண்மையில் நிறுவுவதற்கான அனுமதியை வழங்குமாறு கலாநிதி மனோகர சர்மாக் குருக்கள் நற்பணி மன்றத்தினர் எம்மிடம் விண்ணப்பித்துள்ளார்கள். இது விடயத்தினை அனைத்துப் பொதுமக்களுக்கும் அறியத்தருவதுடன், இது தொடர்பில் ஏதாவது நியாய பூர்வமான ஆட்சேபனைகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை எதிர்வரும் 2013.07.14 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறு தயவுடன்கேட்டுக்கொள்கின்றேன்.

**எஸ். ஞானப்பிரகாசம்,**
**தலைவர்,**
**நகர சபை, மன்னார்.**

(C/10182)
(3.6.11)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு பிற்போடல்



அமரர்
**வேலுப்பிள்ளை குணரத்தினம்**
(மில் குணம்)

எதிர்வரும் 03.07.2013 அன்று நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிரமத்திற்கு மன்னிக்கவும்

சோலை அம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

(C/2707) (10.6)

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**தோற்றம்**
**18.09.1946**

**மறைவு**
**11.07.2012**



அமரர் **சின்னத்தம்பி**
**பத்மநாதன் (பப்பு)**
(முன்னாள் Oprater ராஜா தியேட்டர் )
**(திதி: நவமி)**

*எம்மை விட்டுப் பிரிந்து சென்று ஓர் ஆண்டு ஆனாலும்*
*மனதால் நாம் உங்களை விட்டுப் பிரியவில்லை*
*இவ்வுலகில் நாம் வாழும் வரை உங்களின்*
*நினைவுகளோடு வாழ்ந்திடுவோம்......*

தபாற்கந்தோர் வீதி,
முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி.

**T.தனலட்சுமி**
**(மைத்துனி)**


O/L மாணவர்களே! உங்கள்
வெற்றிக்கான கையேடு
இதோ!
வெளிவந்துவிட்டது
STEP 10




எதிர்பார்க்கை
வினாத்தாள்கள்
உள்ளடங்கலாக

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி
வினாத்தாள்

(C/10058)
(3.6)

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு - 077 2374190, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222


## சமய சந்நிதிகளில்

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெறவுள்ளது.
அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணி தொடக்கம் இடம்பெறும்.
கும்பாபிஷேகத்தையடுத்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ந-9)

★ ★ ★

கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 13 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

பருத்தித்துறை சுப்பர்மடம் முனீஸ்வரன் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிஷேகம், வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ந-8)

★ ★ ★

காரைநகர் களபூமி திக்கரை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ். மாநகரசபை முன்பள்ளிச் சிறுவர்களின் மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு பண்டார மாளிகையில் உள்ள முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.
மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக முதல்வரின் செயலாளர் கு.பற்குணராசா, பிள்ளைப் பருவ ஆரம்ப அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.விமலநாதன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (ந-7)

### தமிழ்த் தினப் போட்டி றோயல் கல்லூரியில்

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி கொழும்பு றோயல் கல்லூரியில் எதிர்வரும் 6ஆம், 7ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-ரி)

## புலமைப் பரிசில் மாணவருக்கு இலவச வகுப்பு

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினால் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற வுள்ள மாணவர்களுக்கான இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
சனசமூக நிலையத்தைச் சேர்ந்த புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கே இந்த வகுப்புக்கள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-135)

## வணிகப் போட்டி

வணிகத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளில் வணிக விழா நடைபெறவுள்ளது.
இந்த விழாவை முன்னிட்டு குறு வினாவிடை, பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி பாடசாலை மட்டத்திலும், 13ஆம் திகதி வடமராட்சி வலய மட்டத்திலும் நடைபெறும். (ந-ரி)

உ
கிளிநொச்சி மாவட்டம் - பச்சிலைப்பள்ளி பதிபுறை
திருவருள் மிகு மல்வில் கிருஷ்ணன் கோயில் -இயக்கச்சி
புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷ
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2015

கும்பாபிஷேகம் 03.07.2013 - புதன்கிழமை
காலை - 7.15 - 8.45

எண்ணெய்க் காப்பு
02.07.2013 - செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10 - மாலை 5 மணிவரை

கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குரு
சிவஸ்ரீ க. நாகேஸ்வரக் குருக்கள்
(எழுதுமட்டுவாழ்)

மகா கும்பாபிஷேகக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மண்டலாபிஷேக நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தாசபை.

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
0215671111
advt@uthayan.com

**வீடு வாடகைக்கு உண்டு**

உரும்பிராய் சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் றோட்டில் வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடனும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மட்டும்.

தொடர்பு: 071493 3276

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் இராமலிங்கம் வீதியில் இருந்து செல்லும் அம்மன் வீதியில் நூறு யார் தூரத்தில் சந்திரசேகரனார் வளவு ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 801 2242

**கடையுடன் காணி விற்பனைக்கு**

இரத்தினபுரம் (கிளிநொச்சி) பிரதான வீதியில்
02 பரப்புக் காணி கடையுடன் கூடியது
விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 077 413 1908, 077 625 6576

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த
Koyo
Value & Technology
MADE IN JAPAN
KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன்
ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

**சேவை நலன் பாராட்டு**



எமது பாடசாலையில் 13 வருடங்களும் வாழ்நாளில்
37 வருடங்களும் ஆசிரிய சேவைக்காக தன்னை அர்ப்பணித்த
அன்பு ஆசிரியை
திருமதி மீனாம்பிகை செந்தில்நாதன்
அவர்கள் 01.07.2013 இல் சேவையிலிருந்து
ஓய்வு பெறுகின்றமையை இட்டு அவருடைய ஆசிரிய சேவையைப்
பாராட்டுவதோடு, ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
வ/ வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/தாவடி இ.த.க பாடசாலையின் அதிபராகக்
கடமையாற்றி 1.7.2013 அன்று பதவியுயர்வு
பெற்று யா/இணுவில் மத்திய கல்லூரி
அதிபராக கடமையேற்கும்
நா.சிவநேசன்
அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று,
சிறப்புற வாழ்த்துன்றோம்.



யா/தாவடி இ.த.க.பாடசாலை
கொக்குவில்.

வாழ்த்துவோர்:
பாடசாலை நலன்புரி சங்கம்.

**மணிவிழா நாயகனே வாழ்க**

**சிவஸ்ரீ முத்து. ஜெயந்தி நாதக்குருக்கள்**



ஆயிரம் மலர் தூவி
வாழ்த்துகின்றோம் - எங்கள்
ஆலயக்குருக்கள் தனை
போற்றுகின்றோம்.

நோய் நொடி இல்லாமல்
நூறு ஆண்டு - இன்னும்
நேர்த்தியாய் வாழ - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாளை வேண்டுகின்றோம்.

மணிவிழா காணுகின்ற
ஜெயந்தி நாதக் குருக்கள் - என்றும்
மகிழ்விற்கு குறைவில்லா
ஜகம் போற்றும் ஒருவர்.

துணிவோடு நந்தாவில் அம்மன்
ஆலயம் வளர்த்திட்ட
பெருமைக்கு உரித்தான
பெயர் சொல்லும் முதல்வர்.

மணிவிழா தனைத் தாண்டி
வாழ்வு நூற்றாண்டு கடக்கும் - என்றும்
மனதாலே நாம் சொல்லும்
வார்த்தைகள் பலிக்கும்.

அழகான குடும்பத்தின்
ஆதாரம் நீர் என்று
உலகத்தோர் உரைக்கின்ற
ஒரு வார்த்தை நிலைக்கும்.

இன்று (01.07.2013) திங்கட்கிழமை
மணிவிழாக் காணும்
சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஜெயந்திநாதக்குருக்களை
பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் (கொக்குவில்)
M.S. தர்மலிங்கம் குடும்பத்தினர்,
கா. சிவகுமார் (சிவா) குடும்பத்தினர்,
க. நவரத்தினம் குடும்பத்தினர்.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# நாட்டில் இனத்துக்கு ஒரு சட்ட நடைமுறையா?

## ஆயர் சுவாம்பிள்ளை கேள்வி

திருகோணமலை,ஜூலை 1

'நாட்டின் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முறைமை தற்போது கேள்விக்குறியாகி உள்ளது. இனத்துக்கொரு சட்ட நடைமுறை தற்போது கையாளப்படுகின்றதா என்ற சந்தேகம் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகின்றது.' இவ்வாறு திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கூறினார்.

திருகோணமலை றொட்டரி கழகத்தின் 35 ஆவது தலைவர் பதவியேற்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 'கிறீஸ் மனிதன்' என்ற ஒரு விடயம் அச்சத்தை ஏற்படுத்திய போது, பொது மக்கள் தமது பாதுகாப்புக்காக சிறு ஆர்பாட்டங்களை நடத்தியும், 'கிறீஸ்' மனிதன் என தாம் சந்தேகித்தவர்களை தாக்கியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்து கொண்டவர்களை பாதுகாப்பு படையினர் தாக்கியதுடன் அதிகமானவர்களை கைது செய்து சிறைகளிலும் அடைத்தனர். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

சில மதவாத அமைப்புக்கள் பள்ளிவாசல்களையும், தேவாலயங்களையும், மதகுருமார்களையும் தாக்கி சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. அந்த அமைப்புக்கள் சட்டத்தை தமது கைகளில் எடுத்து செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் அவர்களை இதுவரை யாரும் கைது செய்யவும் இல்லை; தண்டிக்கவும் இல்லை. இது ஜனநாயக சமூகத்துக்கு ஏற்புடைய நடைமுறை அல்ல.-என்றார். (ச)

# ரம்புக்கன் ஓயா நீர்ப் பாசன திட்டத்தை 20 இல் திறந்து வைப்பார் ஜனாதிபதி



அம்பாறை,ஜூலை 1

சுமார் 12,000 ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கவுள்ளதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ரம்புக்கன் ஓயா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நீர்ப்பாசனத் திட்டம் அம்பாறை , மகாஓயா பிரதேசத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை பார்வையிட நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சனிக்கிழமை அங்கு சென்று பொறியியலாளர்களுடன் கலந்துரையாடினார்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 3,970 மில்லியன் ரூபா செலவில் உள்நாட்டு பொறியியலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகளின் பங்களிப்புடன் இந்த அபிவிருத்தித் திட்டம் கடந்த 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் 3,600 மீற்றர் நீளமும் 81 மீற்றர் உயரமும் கொண்ட அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் 45,500 கன அடி நீரை சேமித்து வைக்க முடியும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## சித்திரப் போட்டியில் மட்டுவில் பாடசாலை மாணவன் தெரிவு



வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாணவர் களுக்கிடையில் நடத்தப்பட்ட மாகாண மட்ட சிறுவர் சித்திரப் போட்டியில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலய மாணவன் குகதாஸ் சர்வீகன் அதிசிறந்த ஐந்து சித்திரத் தெரிவுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி கல்வி வலய மட்டத்தில் நடத்தப்பட்ட வலய மட்ட சித்திரப் போட்டியில் இவர் முதலிடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி இருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பாடசாலை செல்லாது சுற்றித்திரிந்த

### 56 மாணவர்கள் ஒப்படைப்பு

நவாலி, ஜூலை 1

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலை செல்லாமல் இருந்த மேலும் 56 மாணவர்கள் இனங்காணப்பட்டு பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வறுமையானாலும் பெற்றோரின் அக்கறை இன்மையாலும் பாடசாலை செல்லாமல் வீடுகள், சந்தைகள், கடைகள் ஆலயங்களெனப் பல்வேறு இடங்களில் சுற்றித் திரிவதை மக்கள் அவதானித்தனர். இவர்களை இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் கொடுத்ததையடுத்து பிரதேச செயலர் முரளீதரன் தலைமையிலான குழுவினர் உட்பட்ட குழுவினர் இவர்களைத் தேடிக் கண்டு பிடித்தனர். குடும்ப நிலைமைகளை அறிந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு நிலையத்தினர் அவர்களின் வீடுகளுக்குச் சென்று கற்றல் உபகரணங்கள் மற்றும் பொருள்களை வழங்கியுள்ளனர். இவர்களைக் கண்காணிக்கக் குழுவொன்றும் பிரதேச செயலரினால் அமைக்கப்பட்டுள்ளது. (ந-100)

## மரண அறிவித்தல்

### கோபாலசிங்கம் சாந்தறூபி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் செங்குந்த வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் சாந்தறூபி நேற்றுமுன்தினம் (29.06.2013) சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலசிங்கத்தின் (கோபால் சைக்கிள் சென்ரர்) அன்பு மனைவியும், நடேஸ் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மஜிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி) பாபுதன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் சாந்தலட்சுமி, அகிலேஸ்வரன் (சவுதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பூபாலசிங்கம், துரைராஜசிங்கம் (டினேஷ் அச்சகம் கல்வியங்காடு), இராஜேஸ்வரி, ஜெயசிங்கம் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்த வீதி,
கல்வியங்காடு.

(38822)(6.3.45)

தகவல்:
குடும்பத்தினர்.

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜீ.சி.ஈ. சா/த வரை கல்வி கற்றிருப்பதுடன் 16-35 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

தகுதி உடையவர்கள் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ந)

## தென்மராட்சி கல்வி வலயத்துக்கு 27 பேர் நியமனம்

தென்மராட்சி, ஜூலை 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 27 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வில் கடிதங்கள் பெற்றுக் கொண்ட 27 பேரே வலயப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர்.

27 பாடசாலை பணியாளர்களில் 4 சுகாதாரத் தொழிலாளர் களும் 2 காவலாளிகளும் அடங்குவர். (ந-9)

## விசேட தேவையுடைய மாணவருக்கு சித்திரப்போட்டிக்கு ஏற்பாடு

வடமராட்சி, ஜூலை 1

வட மாகாணப் பாடசாலைகளில் கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நடைபெறவுள்ளது.

உட்படுத்தல் கல்வியின் கீழ் சாதாரண வகுப்பறைகளில் கற்றுவரும் விசேட தேவையுடைய மாணவரும் விசேட கல்வி அலகுகள் கற்றுவரும் மாணவர்களும் உள்ளடக்கிய ஒரு குழுவாகவும், விசேட பாடசாலைகளில் கற்றுவரும் மாணவர்கள் வேறாகவும் போட்டிகளில் பங்குபற்றும் வகையில் தனித்தனிப் போட்டிகள் நடத்தப்படும்.

இந்தப் போட்டியில் தரம் 1-3 வரையிலான பிரிவு 1 மாணவர்கள் 'மனதைக் கவரும் மாலைப் பொழுது' 'நான் கற்கும் பாடசாலை', 'எனது குடும்பம்', தரம் 4-5 வரையான பிரிவு 2 மாணவர்கள் 'எனது பூந்தோட்டம்', 'நான் ரசித்த திருவிழா', 'எனக்குப் பிடித்த சிறுவர் பூங்கா, தரம் 6-7 வரையான பிரிவு3 மாணவர்கள் 'அரிவுவெட்டும் காட்சி', 'நான் சென்ற சுற்றுலாப் பயணம், 'எனது நல்ல நண்பர்கள்', தரம் 10-11 வரையான பிரிவு 4 மாணவர் கள் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' 'தடைக்கற்கள் வெற்றிப்படியாகட்டும்', 'உழைப்பால் உயர் உயர்வோம்', தரம் 12-13 வரையான பிரிவு 5 மாணவர்கள் 'இயற்கை அனர்த்தங்கள்', 'புத்தகம் ஒன்றுக் கான அட்டைப் படம்', 'அழகிய பாடசாலைச் சூழல்' 'முயற்சி திருவினையாக்கும்' போன்ற தலைப்புகளில் ஏதாவது ஒன்றை ஒவ்வொரு பிரிவினரும் தெரிவு செய்து சித்திரம் வரையலாம்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் 18X14 அளவுடைய சித்திரத்தாளில் விரும்பிய வர்ணத்தைப் பயன்படுத்தி சித்திரத்தை வரையலாம். போட்டியாளர்கள் தமது சித்திர ஆக்கங்களை ஜூலை 24 ஆம் திகதிக்கு முன்னர் தத்தம் பகுதி வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)


## அவசரப்படும் பஸ்களால் காயமடையும் பயணிகள்

பளை பஸ் நிலையத்தில் பயணிகளை இறக்கி விடுவதற்கு அவசரப்படும் பஸ்களிலிருந்து தவறி வீழ்ந்து பொதுமக்கள் காயமடையும் அவல நிலை காணப்படுகின்றது. ஒன்றன் பின் ஒன்றாக வரும் தனியார் பஸ்கள் அவற்றிலிருந்து பயணிகள் இறங்குவதற்கு முன்னர் புறப்படுவதால் பயணிகள் தவறி வீழ்ந்து காயமடைவதைக் காண முடிகின்றது. அண்மையில் மூன்று பெண்கள் இவ்வாறு காயமடைந்ததாகவும் தெரிய வருகின்றது. (க-9)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா மகாதேவா

(இளைப்பாறிய தபால் அதிபர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மீசாலையில் வசித்தவரும் தற்பொழுது சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா மகாதேவா (இளைப்பாறிய தபால் அதிபர்) 27.06.2013 வியாழக்கிழமை கொன்கோட் வைத்தியசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- மனோன்மணி தம்பதியரின் புதல்வரும், இளைப்பாறிய ஆசிரியை மீனாட்சியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி, மனோரஞ்சிதம், மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜயந்தி, மகேந்திரன், சசீதரன், ஞான ரூபி, சயந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவ்வியநாதன், சுமதி, ரவிமோகன், சிவசக்தி, மைதிலி ஆகியோரின் ஆசை மாமனாரும், ஜனனி, வாணி, நிருத்திகா, ஈஷாணன், நிவாஷா, அஷ்வினி, அங்கீதா, அன்றீதா, ஷோபன், அஷ்மிதா ஆகியோரின் ஆசைப் பேரனும், ஜெசிந்தா, எலிஷா ஆகியோரின் பற்று மிக்க பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2013) காலை சிட்னியில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
0061 2840 39210,
0061 2911 35919,
021 320 5151
L.K.S மெடிக்கல் சென்ரர்,
மீசாலை மேற்கு, மீசாலை.

(C/10165)
(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசநாயகம் தாமோதரம்பிள்ளை



கொல்லன் தோட்டம் (திருவாணி) கரணவாய்வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சக்கலாவத்தை கரணவாய் வடக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் தாமோதரம்பிள்ளை கடந்த (28.06.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசநாயகம்-மீனாட்சிப்பிள்ளை (இரத்தினம்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா -செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், விஜயலக்ஸ்மியின் (விஜயா)அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் ரவீந்திரன் (சோமு, சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளன்(கனடா), தயாளினி, ரஞ்சினி(சுவிஸ்), ஜெகன்(கண்ணன்-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா(கனடா), தேவச்சந்திரன் (மொடேன் கல்வி நிலைய நிர்வாகி), யோகலிங்கம்(சுவிஸ்), லக்சனா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், கிசோக்(கனடா), ஆருணன்(கனடா), பிரியதர்சினி, தாட்சாயினி, தர்சிகா, திவ்வியா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்(சிவா) மற்றும் இராசமலர்(தேவி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2013) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

(C/10163)(10.6.16)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 01.06.1952 — மறைவு 01.06.2013

அமரர்

### சின்னையா பரிமேலழகர் (கண்டு)

(முன்னைநாள் கிளை முகாமையாளர்
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மலேரியா தடுப்பு பிரிவு
சுகாதார திணைக்களம்)

"தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் குறளுக்கு
சான்று பகர்ந்த தக்கோய் - அப்பா
ஈண்டு எம்மிடை நீங்கள் இல்லையே எனினும்
மீண்டும் எம்மிடை வாருங்கள் - அப்பா

கடந்த 01.06.2013 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் சின்னையா பரிமேலழகர் (கண்டு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.07.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன் னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், இறுதிவரை உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

செம்பியன்பற்று தெற்கு,
செம்பியன்பற்று.

(C/10120)(10.6.16)


குடும்பத்தினர்.

# டயர் வெடித்த நிலையில் தரையிறங்கிய விமானம்

## விமானியின் சாதுரியத்தால் உயிர்தப்பிய பயணிகள்



கொழும்பு,ஜூலை 1
இலங்கை அரசுக்கு சொந்தமான போயிங் 737 விமானம் ஒன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு புது டில்லி விமான நிலையத்தின் மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.
70 பயணிகளுடன் வந்த அந்த விமானத்தை ஓடுபாதையில் இறக்கிய விமானி சக்கரங்களின் 'பிரேக்' பிடிக்கவில்லை என்று கட்டுப்பாட்டு அறைக்கு அவசர தகவல் அளித்தார்.
அதனையடுத்து. அந்த விமானத்தை பாதுகாப்பாக இழுத்து வருவதற்கான ஏற்பாடுகளை டெல்லி விமான நிலைய அதிகாரிகள் அவசரமாக மேற்கொண்டனர்.
இலங்கை விமானத்தின் அருகே சென்று பார்த்தபோது 2 டயர்களும் வெடித்து இருந்தமை தெரியவந்தது.
காற்று இல்லாத டயருடன் விமானத்தை இழுத்து வருவது ஆபத்து என்பதால் பயணிகளை அங்கேயே இறங்கவைத்து பஸ்களின் மூலம் அவர்களை விமான நிலைய கட்டடத்துக்கு அதிகாரிகள் அழைத்து வந்தனர்.
விமானி தக்க நேரத்தில் தகவல் தெரிவிக்காமல் இருந்தால் டயர் வெடித்த அந்த விமானம் ஓடுபாதையில் தாறுமாறாக ஓடி விபத்தை ஏற்படுத்தி இருக்கும்.
இலங்கை விமானம் ஓடுபாதையின் குறுக்கே நின்றதால் மற்ற விமானங்கள் எல்லாம் மாற்று ஓடுபாதை வழியாக திருப்பி விடப்பட்டன.
புதிய சக்கரங்கள் பொருத்தப்பட்ட பின்னர் அந்த விமானம் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று அதிகாரிகள் கூறினர். (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செசெல்ஸுக்கு சனிக்கிழமை சென்றபோது அந்நாட்டு ஜனாதிபதி ஜேம்ஸ் மைக்கல் விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனை கையேடு வெளியீடு




கொழும்பு,ஜூலை 1
2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திடைந்த மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பமும் ஆலோசனைகளும் அடங்கிய கையேடு வெளியிடப்பட்டுள்ளது.
இந்த கையேட்டை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஷனிக்கா ஹிரிம்புரேகம கூறினார். (ச)

## வெலிக்கடை சிறைச்சாலையில் நெரிசல்



கொழும்பு,ஜூலை 1
வெலிக்கடை சிறைச்சாலையில் அதிகரிக்கும் கைதிகளால் சனநெரிசல் நிலவி வருகிறது.
இந்த சிறைச்சாலையில் பத்தாயிரம் கைதிகள் மேலதிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் .
வெலிக்கடைச் சிறைச்சாலையில் மொத்தமாக 22,525 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சிறையில் 11782 பேரை தடுத்து வைக்கக் கூடிய வசதிகளே காணப்படுகின்றன. அதனால் அதிகளவு சன நெரிசல் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ச)

## சிறுநீரக நோயினால் 30 ஆயிரம் பேர் சாவு



யாழ்ப்பாணம், ஜூலை 1
சிறுநீரக நோயின் காரணமாக நாட்டில் இதுவரையில் 30 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று விவசாய அமைச்சின் செயலர் விஜேரத்ன சகலசூரிய தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அநுராதபுரம், பொலன்னறுவை உள்ளடங்கலாக நாட்டில் ஒரு லட்சம் பேர் வரையில் சிறுநீரக நோயாளிகளாயுள்ளனர். அவர்களுள் பெரும் எண்ணிக்கையானோர் மேற்படி வலயங்களில் இருந்தே கண்டறியப்பட்டுள்ளனர்.
போரின் காரணமாக உயிரிழந்துள்ளோரின் எண்ணிக்கையை விட இன்று சிறுநீரக நோய்க்கு இரையாகி வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சிறுநீரக நோய் பரவிச் செல்வதனை தடுப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.
இது தொடர்பாக விவசாயத்துறை நிபுணர்கள் குழுவின் யோசனைகள் போன்றே புத்திஜீவிகளின் ஒத்துழைப்பும் அவசியமானது.
சிறுநீரக நோய்த் தாக்கத்துக்கு விவசாய இரசாயனங்கள் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றனவா என்பதுவும் கண்டறியப்பட வேண்டும்- என்றார்.(எ-22)

## நுழைவிசை பெற பிணைப் பணம்

### இலங்கை எதிர்ப்பு

கொழும்பு,ஜூலை 1
பிரிட்டனுக்கு பயணம் செய்வோர் நுழைவிசை பெற, 3000 பவுண்சை பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும் என்கின்ற பரிந்துரையை இலங்கை எதிர்த்துள்ளது.
இந்தத் தீர்மானம் தொடர்பில் இலங்கை அதிருப்தி அடைந்துள்ளது என்று பிட்டன் உயர் ஆணையாளர் ஜோன்றன்கின்னிடம் இலங்கை வெளியுறவு அமைச்சரின் செயலர் கருணாதிலக அமுனுகம தெரியப்படுத்தியுள்ளார்.
இந்தச் சட்டம் மூலம் நுழைவிசைவு விண்ணப்பதாரிகள் பாதிக்கப்படமாட்டார்கள். அதனால் அவர்களது பிணைப்பணம் மீளவழங்கப்பட முடியும் என்று பிரிட்டன் உயர் ஆணையாளர் உறுதி வழங்கியுள்ளார் என்று அமுனுகம கூறினார்.
இதேவேளை பிரிட்டனின் தற்போதைய நுழைவிசைவுச் சட்டத்தை நைஜீரியாவும் எதிர்த்துள்ளது. இது இரு நாடுகளிலும் வாழும் மக்களின் உறவைப் பாதிக்கும் என்று நைஜீரியா எச்சரித்துள்ளது.
இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், இலங்கை, நைஜீரியா , கானா ஆகிய ஆறு நாடுகளிலிருந்து பயணம் செய்வோர், இந்த ஆண்டு நவம்பர் முதல் தமது குறுகிய கால நுழைவிசைவைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் போது 3000 பவுண்சைப் பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும் என்று பிரிட்டன் உள்துறை செயலகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தனியார் பஸ் கட்டண அதிகரிப்பு உடனடியாக இல்லை



கொழும்பு,ஜூலை 1
தனியார் பஸ் கட்டணத்தை இன்று திங்கட்கிழமை முதல் அதிகரிப்பதில்லை என்று தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.
பஸ் உரிமையாளர் சங்கத்துடன் மேற்கொண்ட பேச்சையடுத்து இன்று இடம்பெறவிருந்த தனியார் பஸ் கட்டண உயர்வு ஒத்திப் போடப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.
வருடாந்தம் ஜூலை மாதத்தில் தனியார் பஸ் கட்டணங்களில் திருத்தம் ஏற்படுத்தப்படும். அந்தவகையில் இந்த ஆண்டு இன்று பஸ் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பல பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.
இது தொடர்பில் அமைச்சர் சிபி. ரத்நாயக்க ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததன் படி பஸ் கட்டண உயர்வில் பஸ் உரிமையாளர்கள் ஒரே நிலைப்பாட்டுக்கு வரவில்லை என்பதே முக்கிய காரணமாகியிருந்தது.
அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களில் இன்று பஸ் கட்டணத்தை அதிகரிப்பதில்லை என்று பஸ் உரிமையாளர்கள் சங்கம் முடிவெடுத்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (ச)

## விமான நிலையத்தில் குருதிப் பரிசோதனை

### சட்டம் வகுக்க ஆராய்கிறது அமைச்சு



கொழும்பு,ஜூலை 1
மலேரியா காய்ச்சல் பரவியுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருவோர் விமான நிலையத்தில் கட்டாயமாக குருதி பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான சட்டத்தை வகுப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகிறது.
இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்று மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பிரிவின் பணிப்பாளர் சரத் தெனியகெ தெரிவித்தார்.
வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதந்த 28 மலேரியா நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
எனினும் விமான நிலையத்தில் அடையாளம் காணப்படாத மலேரியா நோயாளர்கள் நாட்டுக்குள் சென்றால் மீண்டும் இலங்கையில் மலேரியா காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.
எனவே விமான நிலையத்தில் குருதி பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டால் மலேரியா நோயாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதை முற்றாகத் தடுக்க முடியும் என்று அவர் கூறினார். (ச)

# வாக்காளர்களாக பதிவு செய்ய மீண்டும் வலியுறுத்துகிறது கபே

யாழ்ப்பாணம், ஜூலை 01

வடக்கில் இதுவரை தம்மை வாக்காளராக பதிவு செய்யாதவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவிலுள்ள கபே அமைப்பின் அலுவலகங்களிலும் உரிய படிவத்தைப் பெற்று, பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணத்தில், திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள அலுவலகத்தில் படிவங்களைப் பெறலாம். அத்துடன் அலுவலக இலக்கமான 021 222 9866 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறமுடியும் எனவும், முல்லைத்தீவில், வண்ணாங்குளம் பகுதியில் உள்ள அலுவலகத்தில் படிவங்களைப் பெறலாம். அத்துடன் அலுவலகத்தில் 077 6239437 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெறலாம்எனவும் கபே அமைப்பு அறிவித்துள்ளது.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இந்த அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தம்மை வாக்காளராகப் பதிவு செய்ய முடியும்.

தேர்தல் திணைக்களத்தின் அனுமதியும் இந்த வேலைத் திட்டத்தை கபே அமைப்பு முன்னெடுத்து. வடக்கு, கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து பிறமாவட்டங்களிலும், பிறமாகாணங்களிலும் வசித்து வரும் மக்களில் இதுவரை தம்மை வாக்காளராகத் பதிவு செய்யாதிருப்பின் அவர்களை 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில்சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டத்தில் உள்ளவர்கள் இல. 100/19 ஏ வெலிகடவத்த வீதி ராஜகிரியவில் உள்ள கபே அமைப்பு அலுவலத்துடன் தொர்பு கொள்ள முடியும் என்றும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-4)

# திமிருடன் இருந்த அரசுக்கு கூட்டமைப்பு தக்க பதிலடி

கொழும்பு, ஜூலை 1

''13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கப் போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துள்ள முடிவை மனதார வரவேற்கின்றேன். இதுவே எனது விருப்பமாகவும் இருந்தது.''

– இவ்வாறு நேற்று தெரிவித்தார் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

''தெரிவுக்குழுவுக்கு வாருங்கள்; நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கிறோம்; ஆனால், நாம் நினைப்பதையே செய்து முடிப்போம்'' என்ற திமிருடன் இருந்த இந்த அரசுக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் தக்க பதிலை வழங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தச் சட்ட விவகாரம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து தீர்மானிப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், மேற்படி தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்வதில்லையென முடிவெடுக்கப்பட்டது.

அதேவேளை, தெரிவுக்குழுவில் தமிழ்க் கூட்டமைப்பு பங்கேற்காதமைக்கான காரணங்கள் குறித்து இன்று அல்லது நாளை அறிக்கையூடாக தெளிவாக அறிவிக்கப்படவுள்ளது என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த முடிவு குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

''வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள்தான் பெரும்பான்மையினர். ஆனால், மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்களை வைத்து சிறுபான்மையினர் ஆக்கிவிட்டன. எனினும், வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம்களை உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினர்.

இதனை விரும்பாத இந்த அரசு, தனது படைகளை வைத்துக்கொண்டு வடக்கு, கிழக்கில் தொடர் ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இதுவும் போதாது என்று காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய – தமிழ் பேசும் மக்களின் தீர்வுக்கு அடித்தளமாகவுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பதில் இந்த அரசு மும்முரமாகவுள்ளது.

தனது இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை இந்த அரசு நியமித்துள்ளது.

ஆனால், அரசின் முடிவுகளுக்குத் தலையாட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியிருந்தால் தமிழ் பேசும் மக்களுக்குச் சார்பாக அங்கு 4 நாடாளுமன்ற உறுப்பினர்களின் குரல்கள் மட்டும்தான் ஒலித்திருக்கும்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நடைமுறையிலுள்ள 13ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் – தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்துவரும் – நல்லிணக்கத்தை விரும்பும் – ஆளுந்தரப்பு சிரேஷ்ட அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரட்ன ஆகியோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அதில் சேர்க்கப்படவில்லை.

இவர்கள் இல்லாத இந்தத் தெரிவுக்குழுவில் தமிழ் பேசும் சமூகத்தினருக்கு நம்பகத்தன்மை இல்லாமல் போய்விட்டது; மதிப்பும் குறைந்துவிட்டது.

இந்த நிலையில், இந்தத் தெரிவுக்குழுவில் பங்கேற்கமாட்டோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துள்ள முடிவை நான் மனதார வரவேற்கின்றேன். இதுவே எனது விருப்பமாகவும் இருந்தது.

தெரிவுக்குழுவுக்கு வாருங்கள்; நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கிறோம்; ஆனால், நாம் நினைப்பதையே செய்து முடிப்போம் என்ற திமிருடன் இருந்த இந்த அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது முடிவினூடாக தக்க பதிலை வழங்கியுள்ளனர்'' – என்று தெரிவித்தார் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன். (ங-சி)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நேற்று திடீர் நேர்முகத் தேர்வு

## நடத்தியது வடமாகாண கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 01

தொண்டர் ஆசிரியர்கள் என்று கூறி பாடசாலை அதிபர்களது முத்திரை உறுதிப்படுத்தலுடன் அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்ட 300 பேருக்கு வடமாகாண கல்வி அமைச்சு நேற்று நேர்முகத் தேர்வு நடத்தியது.

தகவல் திரட்டுவதற்கான நேர்முகத் தேர்வாக இது அமைந்த போதும் நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வா இது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் எஸ். சத்தியசீலனுடன் பலமுறை தொடர்பு கொண்ட போதும் தொர்பு கிடைக்கவில்லை.

புத்தளம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த நேர்முகத் தேர்வு நேற்று நடைபெற்றுள்ளது. இவர்களில் சுமார் 90 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் முஸ்லிகள்.

நேர்முகத் தேர்வுக்கு சென்றவர்களில் பெரும்பாலனோர் ஒரு வருடம் தொடக்கம் 5 வருடங்கள் வரை தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் எனவும் ஒரு சிலர் 10 வருடங்களாக பணியாற்றியவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

# ஐ.நா. உணவு அமைப்பின், உப தலைவராக மஹிந்த யாப்பா



ஐ.நா. சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் உபதலைவராக இலங்கையின் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையர் ஒருவருக்கு இந்தப் பதவி கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (ஐ-22)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# அமெரிக்க பதில் உதவி சட்டமா அதிபராக வடமராட்சிப் பெண்

டங்களில் குற்றவியல் விவகாரங்களை விசாரணை செய்யும், குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்தும் 93 அமெரிக்க சட்டவாளர்களுடனும் இவர் நெருக்கமாகப் பணியாற்றுவார்.

மைதிலி ராமன் கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம், குற்றவியல் பிரிவில் பணியாற்றி வருகிறார். 2009 செப்ரெம்பம் 2 ஆம் திகதி தொடக்கம் இவர், பதில் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட அவர், 2013 மார்ச் முதலாம் திகதி முதன்மை பிரதி உதவி சட்டமா அதிபர் மற்றும் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மைதிலி ராமன் 1996இல் அமெரிக்க நீதித்துறைத் திணைக்களத்தில் இணைந்து. குற்றவியல் பிரிவில், போதைப்பொருள் தடுப்பு வழக்குகளில் முன்னிலையாகி வந்தார்.

1999 தொடக்கம் 2008வரை, மேரிலான்ட் மாவட்டத்தில், சட்டமாஅதிபர் பணியகத்தில், உதவி அமெரிக்க சட்டவாளராக பணியாற்றினார். இதன்போது போதைப்பொருள் தடுப்பு, நிதிமுறைகேடு, வன்முறைகள், சிறார் கடத்தல், குடியியல் உரிமை வழக்குகளில் இவர் பங்கெடுத்தார்.

இவரது தந்தை ஏ.தர்மரத்தினம் உலக வங்கியின் அனைத்துலக நிதிக் கூட்டுத்தாபனத்திலும், பேரனாரான சி.லோகநாதன் இலங்கை வங்கியின் முன்னாள் பொது முகாமையாளராகவும் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-சி)

**காணி விற்பனைக்கு**

ஆறுகால்மடம், பழம் வீதி முதலாம் ஒழுங்கையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0779332525

**சேவைகள்**

சிறந்த முறையில் கதிரைகள் பின்னிக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0774652376 (38829) (10,6,16)

**வளவு விற்பனைக்கு**

பெரியவிளான் சந்தி, அந்தோனியார் வீதியில், வீதிக்குத் தெற்கே முதலாவது வளவு 2½ பரப்பு விற்பனைக்குண்டு. வீடு, கடை கட்டுவதற்கு பொருத்தமான இடம்.

தொடர்புகளுக்கு:
0779493838 (38826) (10,6,16)

# விடுதலை வேண்டுமா குதியுங்கள் தேர்தலில்

கள், கிராமசேவர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், முன்னாள் அரசியல்வாதிகள் ஆகியோரிடமே அரசு பேரம்பேசத் தொடங்கியுள்ளது. விரைவில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் சுயேச்சைக்குழுக்களாக இவர்களை போட்டியிட்டு அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அதற்கு உடன்படுபவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவர் என்றும் கைதிகளுக்கு அரச அதிகாரிகள் கடந்த சில தினங்களாக ஆசையூட்டத் தொடங்கியுள்ளனர், இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைச் சிதறடித்து, அந்தக் கட்சி பெறும் ஆசனங்களின் எண்ணிக்கையை குறைப்பதே அரசின் நோக்கமாக இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

2010இல் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலிலும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சிலரை சுயேச்சைக்குழுக்களாக வடக்கில் அரசு களம் இறக்கியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## '13' ஐ இல்லாதொழிக்கக் கோரும் சட்டவரைவு இன்று விசாரணைக்கு

ளப்படவுள்ளது.அந்த மனுவில் ஹெல உறுமயவின் தனிநபர் சட்டவரைவு குறித்து உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானமும் கோரப்பட்டுள்ளது.மாகாண சபை முறை உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த 13 ஆவது திருத்தத்தில் ஏதாவது திருத்தங்களை மேற்கொள்ளவேண்டுமாயின் அதற்கு அனைத்து மாகாணங்களினதும் ஒப்புதல் அவசியம் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அனைத்து மாகாணங்களிலும் ஒப்புதல் கிடைத்த பின்னரே சட்டவரைவு நாடாளுமன்றில் ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படவேண்டும். எனினும், இந்த நடைமுறையையே மேற்படி சட்டமூலம் மீறியுள்ளது என்றும் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு
**புனித செபமாலை அன்னை ஆலயத் திருவிழா**



01.07.2015 திங்கள் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் திருப்பலியும் நற்கருணை ஆராதனை வழிபாடும் நடை பெறும்.

02.07.2015 செவ்வாய் மாலை 6.30 மணிக்கு செபமாலையுடன் திருவிழா திருப்பலி யாழ் குருமுதல்வர் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களது தலைமையில் நடை பெறும்

அன்னையின் பக்தர்கள் அனைவரும் அன்னையின் அருளாசிபெற அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

பங்குத்தந்தையும் பங்கு மக்களும்.
புனித செபமாலை அன்னை ஆலயம் பண்டத்தரிப்பு.

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**



- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட குறைந்த கட்டணங்கள்.
- மருந்துப்பொருள்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளிற்கு வந்து பொருள்களை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் விசேட சேவை.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.



மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1
மற்றிக்ஸ்கோம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில், யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி
மத்திய கல்லூரி எதிர் கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரி.(ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 3.30 மணி
மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க. எதிர் மனோகரா வி.க.
பி.ப. 4.30
மைக்கல் வி.க. எதிர் கலைமதி வி.க. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1
மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, 15, 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:

15 வயதுப் பிரிவு
பி.ப. 1 மணி
ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை (நீலம்) எதிர் யாழ். மத்திய கல்லூரி.
பி.ப. 2 மணி
சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
17 வயதுப் பிரிவு
பி.ப. 3 மணி
ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி
பி.ப. 4 மணி
கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (ற-23)




யாழ்.வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சண்டிலிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அணியினர். (ற-23)

# பாசையூர் சென்.அன்ரனிஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1
புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ற-23)

# பற்றிக்ஸிடம் பணிந்தது வயம்ப றோயல்

குருநகர், ஜூலை 1
அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பிரிவு II கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, வயம்ப றோயல் கல்லூரி அணியை 44 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.



கடந்த வாரம் சென்.பற்றிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் பெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

27.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது சென்.பற்றிக்ஸ் அணி.

அல்வின் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும், சிந்துஜன் 10 ஓட்டங்களையும், கொலின்ஸ் 10 ஓட்டங்களையும் பற்றிக்ஸ் அணி சார்பாக அதிகபட்சமாகக் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் வயம்ப றோயல் கல்லூரி அணி சார்பில், அபயகூன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கவிந்து 7.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தென்னக்கோன் ஓர் பந்துப்பரிமற்றம் பந்து வீசி ஓட்டங்கள் எதுவும் கொடுக்காது ஓர் இலக்கையும், அபயவர்த்தன 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், சந்திமால் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய வயம்ப றோயல் கல்லூரி அணியினர் 24.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 65 ஓட்டங்ளுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

கவித்து 14 ஓட்டங்களையும், பிறேமவர்த்தன 12 ஓட்டங்களையும், லொண்டிகம 11 ஓட்டங்களையும் வயம்ப றோயல் சார்ப்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் சார்பில், பிறாங்கிளின் ரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், கொலின்ஸ் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ஜெறிக்ஸன் 8.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(ற-51)

# சென். ஜோன்ஸின் அதிரடியில் வீழ்ந்தது யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 1
பிளமிங்கின் அதிரடியான துடுப்பாட்டமும், அணியின் துல்லியமான பந்து வீச்சும் கைகொடுக்க வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 252 ஓட்டங்களால் வெற்றி கொண்டது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி.



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம், 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே அகில இலங்கை ரீதியாக நடத்தும் பிரிவு iii கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றிலேயே சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இந்த அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென உயரத் தொடங்கியது.

அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார் பிளமிங். 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

பிளமிங் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களையும், தேவபிரசாந் 63 ஓட்டங்களையும், லியோனி 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.


யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்துவீசிய, நிலக்சன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 75 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைய வீழ்த்தினார்.

316 என்ற கடின இலக்கை விரட்டத் தொடங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் துடுப்பாட்ட வீரர்கள், சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சை எதிர் கொள்ள முடியாது திணறினர்.

இலக்குகள் அடுத்தடுத்துச் சரியத் தொடங்கின. துடுப்பாட்ட வீரர்கள் ஒன்றை இலக்கங்களுடன் பவிலியன் திரும்ப, 29.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களுடன் சுருண்டது யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

நிலக்சன் அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் தோமஸ்கரன் 5.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், கபில்ராஜ் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், யதுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.(ற-23)





வடமாகாண உடற்பயிற்சிப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அணியினர், பாடசாலையின் 175 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளின் போது உடற்பயிற்சி சாகசங்களை செய்து காண்பித்தனர். (ற-23-ரி)

# புத்தூர் எவறெஸ்ட் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## லீமனின் பயிற்சியில் விளையாட விருப்பம்

### வொட்சன்

ஆஸ்திரேலிய அணியின் புதிய பயிற்றுவிப்பாளரான டெரன் லீமனின் கீழ் மகிழ்ச்சியாக பணியாற்ற முடிவதாக அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷேன் வொட்சன் தெரிவித்துள்ளதுடன் முன்னாள் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் சில செயற்பாடுகளையும் அவர் விமர்சித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய விதத்தில் ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட மிக்கி ஆர்தருக்குப் பதிலாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் அறிவிக்கப்பட்டிருந்தார்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷேன் வொட்சன்.

''கிரிக்கெட்டை மகிழ்ச்சியாக விளையாடுவதற்குரிய வழிவகைகளை டெரன் லீமன் ஏற்படுத்தியுள்ளார்'' என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு இந்தியாவில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரின்போது 2ஆவது போட்டியின் பின்னர் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலைப் பின்பற்றாததன் காரணமாக ஷேன் வொட்சன், மிற்சல் ஜோன்சன், ஜேம்ஸ் பற்றின்சன், உஸ்மான் கவாஜா ஆகியோர் 3ஆவது போட்டியில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடை முடிவு தவறானது எனக் குறிப்பிட்ட ஷேன் வொட்சன், இந்தத் தடை தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்றுள்ள டெரன் லீமன் அணியிலுள்ள வீரர்கள் மகிழ்ச்சியான மனநிலையுடன் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதை உறுதி செய்துள்ளார் என்று தெரிவித்த ஷேன் வொட்சன், டெரன் லீமனின் கீழ் வீரர்கள் தங்களுக்கு விரும்பிய விதத்தில் தங்களை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## வரி கட்டாத பி.சி.சி.ஐ.

உலகிலேயே பணக்கார கிரிக்கெட் அமைப்பான இந்தியக் கிரிக்கெட் சபைக்கு இந்திய மதிப்பில் ரூ.354 கோடி வரி நிலுவை உள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது.

2007-08ஆம் ஆண்டில் இருந்து2010-11ஆம்ஆண்டு வரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வரி நிலுவை வைத்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் பி.சி.சி.ஐ. வரி நிலுவை வைத்திருக்கக் கூடும் என்றும் ஆனால் அது தொடர்பான முழு விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)



## பிரேஸில் - ஸ்பெய்ன் இறுதியில் பலப்பரீட்சை

கொன்பெடரேஷன் உதைபந்துத் தொடரின் இறுதியாட்டத்தில் பிரேஸில் மற்றும் ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன.

அதில் பிரேசில் வெல்லும் பட்சத்தில், தொடர்ந்து மூன்றாவது முறையாக கிண்ணம் வென்ற சாதனையைப் படைக்கலாம்.

பிரேஸில் அணிக்கு நெய்மர் இருப்பது கூடுதல் பலம். இவரது நேர்த்தியான ஆட்டம் இறுதியாட்டத்திலும் தொடர்வது நிச்சயம். தவிர மார்செலோ, பிரட், லூயிஸ், கஸ்தாவோ, பாலினோ ஆகியோர் சொந்த மண்ணில் அசத்தலாம்.

அதேவேளை, உலகின் முன்னணி அணிகளை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ள ஸ்பெயின் அணியை சமாளிப்பது அவ்வளவு எளிதல்ல.

இந்தச் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்துக்கு ஸ்பெயின் அணி முதல்முறையாக முன்னேறியுள்ளது. அணியின் தூணாக இருப்பவர் கோல் காப்பாளரும் அணித் தலைவருமான கேசிலாஸ். எதிரணியினரின் கோல் வாய்ப்பை அசத்தலான திறமையால் தடுப்பவர்.

அணியின் நட்சத்திர வீரர்களாக இனியஸ்டா, ஜெரார்ட், டோரஸ், செர்ஜியோ ராமோஸ் ஜொலிக்கின்றனர்.

முக்கியமாக, கடந்த அரையிறுதியில் 'சடன் டெத்' வாய்ப்பில் கோல் அடித்து வெற்றி தேடித் தந்த ஜீசஸ் நவாஸ் இருப்பது நம்பிக்கை.

கிண்ணத்தை வெல்லப் போவது யார் என்பதை பொறுத் திருந்து பார்க்கலாம். (ற)

## விரைவாக வென்றால் போனஸ்

''ஆட்டத்தை விரைவாக முடியுங்கள். போனஸ் கிடைக்கும் என்று கெயிலுக்கு தகவல் அனுப்பினேன்'' என்று கூறியுள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டுவைன் பிராவோ.

முத்தரப்பு தொடரின் முதலாவது ஆட்டத்தில், இலங்கை அணியை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டுவைன் பிராவோ,

''தொடக்க வீரர் கிறிஸ் கெய்ல் அதிரடியாக விளையாடிக் கொண்டிருந்தார். இலங்கை பந்துவீச்சை அவர் துவம்சம் செய்ததை பார்த்த பிறகு, ஆட்டத்தை விரைவாக முடித்தால் போனஸ் புள்ளி கிடைக்கும்... அதற்கேற்ப விளையாடுங்கள் என்று 29வது பந்துப் பரிமாற்றத்தில் தகவல் அனுப்பினேன். முதல் போட்டியில் வெல்வது எப்போதுமே முக்கியமானது. சுனில் நரைனின் சுழல் எங்களின் முக்கிய துருப்புச் சீட்டாகும். அவர் அணியில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது'' என்று கூறியுள்ளார்.

பிராவோ தகவல் அனுப்பிய பிறகு ஒரு சிக்சர் மட்டுமே விளாசிய கெய்ல், 31ஆவது பந்துப்பரிமாற்றத்தின் கடைசி பந்தில் ஆட்டமிழந்திருந்தார். (ற)

## ஜோகோவிச், செரீனா அடுத்த சுற்றில்



விம்பிள்டன் ரென்னிஸ் நான்காவது சுற்றுக்குச் செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

லண்டனில், கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த ஆடவர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், உலகின் முதற்தர வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரான்சின் ஜெர்மி கார்டியை சந்தித்தார்.


ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் முதல் செற்றை 6:3 என்று வென்றார். தொடர்ந்து அசத்திய ஜோகோவிச் அடுத்த இரண்டு செற்களையும் 6:2, 6:2 என்று கைப்பற்றினார். முடிவில், ஜோகோவிச் 6:3, 6:2, 6:2 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று காலிறுதியின் முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் டேவிட் பெரரர், உக்ரைனின் அலெக்ஸ்சாண்டரை, 6:7, 7:6, 2:6, 6:1, 6:2 என்று போராடி வீழ்த்தினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஜப்பானின் கிமிகோ கிரமை சந்தித்தார்.

தொடக்கம் முதல் அசத்திய செரினா, 6:2, 6:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று காலிறுதியின் முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் லிசிக்கி, ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோச்சரை 4:6, 6:2, 6:1 என்ற செற்களில் வீழ்த்தினார். (ற)





## ஷில்பாவும், ராஜ் குந்த்ராவும் பத்தரை மாற்றுத் தங்கங்கள்

### டில்லிப் பொலிஸார் சான்றிதழ்

ஐ.பி.எல். தொடரில் இடம்பெற்ற சூதாட்டச் சம்பவங்களுடன் ஷில்பா ஷெட்டிக்கும், ராஜ் குந்த்ராவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று திடீர் 'பல்டி' அடித்துள்ளனர் மும்பை பொலிஸார்.

ஐ.பி.எல். ஆட்டநிர்ணய சூதாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் ஆகியோர் ஈடுபட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.


சூதாட்டம் குறித்து புது டில்லி பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரும், நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவருமான ராஜ் குந்த்ராவுக்கும் சூதாட்டத்தில் தொடர்பு இருந்தமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

அதையடுத்து புது டில்லி பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தியதுடன் அவரின் கடவுச் சீட்டையும் பறிமுதல் செய்திருந்தனர். கடந்த 3 ஆண்டுகளாக ராஜ் குந்த்ரா சூதாட்டத்தில் ஈடுபட்டு ரூ.3 கோடி வரை இழந்துள்ளார் என்று அவர் வாக்குமூலம் கொடுத்தார் என்று வேறு அறிக்கை விட்டனர்.

இந்தநிலையில் தற்போது ஷில்பா ஷெட்டியும், ராஜ் குந்த்ராவும் நேர்மையானவர்கள். எந்தத் தவறும் செய்யவில்லை என்று புதுடில்லிப் பொலிஸார் திடீர் 'பல்டி' அடித்துள்ளனர்.

தங்களது விசாரணையின் முடிவில் ஷில்பா ஷெட்டிக்கும், ராஜ் குந்தராவுக்கும் ஐ.பி.எல். சூதாட்டத்தில் தொடர்பு இருந்ததற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று புதுடில்லிப் பொலிஸாரின் விசாரணை அறிக்கையை முடித்துள்ளனர். (ற)

# மோசடிக்கு வருத்தம்



பணத்தைப் பெற்றுக் கொண்டு முறையற்ற பந்துகளை வீசிய குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட் முதன்முறையாக ஏற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு தனது நடவடிக்கைகளுக்காக மன்னிப்புக் கோருவதாகவும் சல்மான் பட் தெரிவித்துள்ளார்.

சல்மான் பட்டுக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்ட 10 வருடப் போட்டித் தடையில் 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட தடை என்பதால் அவரால் 5 வருடங்களின் பின்னர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியுமென்பதால், தான் இதுவரை 3 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளதால், உள்ளூர்ப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் சல்மான் பட் கோரியுள்ளார்.

"ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட தனது நடவடிக்கை காரணமாக ஏமாற்றமடைந்த அனைவரிடமும் மன்னிப்புக் கோருகிறேன். இதேவேளை, எனது நடவடிக்கை காரணமாக கிரிக்கெட்டின் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்திற்காகவும் மன்னிப்புக் கோருகிறேன்.

கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றி வரும் வீரர்கள் இவ்வாறான தவறுகளில் ஈடுபடக்கூடாது. இவ்வாறான தவறுகள் வீரர்களையும், கிரிக்கெட்டையும் பாதிக்கின்றது." என்றும் சல்மான்பட் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பணத்தைப் பெற்றுக் கொண்டு சல்மான் பட், மொஹமட் ஆமிர், மொஹமட் ஆசிப் ஆகியோர் முறையற்ற பந்தை வீசியமைக்காக முறையே 10, 5,7 வருடங்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடர் நியூஸிலாந்துக்கு

இங்கிலாந்து அணிக்கெதிரான 20/20 தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது 20/20 சர்வதேசப் போட்டி மழையினால் முடிவேதும் பெறப்படாது கைவிடப்பட்டதையடுத்தே இந்தத்தொடர் நியூசிலாந்து வசமாகியுள்ளது.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் இரண்டாவது பந்தில் தனது முதல் இலக்கை இழந்தபோது மழை குறுக்கிட்டது.

மழை தொடர்ச்சியாகப் பெய்ய, போட்டியை மீள ஆரம்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பதால் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்ற நிலையில், தொடர் நியூசிலாந்து வசமாகியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் சம்பியன்ஸ் கிண்ணத்திற்கு முன்னதாக இங்கிலாந்தில் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரையும் நியூஸிலாந்து அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வெல்வதே இலக்கு



தற்போது நடைபெற்று வரும் முக்கோண தொடர் குறித்து கவனம் செலுத்தி வருகிறோம். இந்திய அணியை பொறுத்த வரை இந்த தொடரிலும் சாதிக்க வேண்டுமென்பதுடன், கிண்ணத்தை கைப்பற்றுவதே எமது இலக்கு என்று இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

"தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குபற்றுவதால் எமது அணி சோர்ந்து விடவில்லை. எனினும் ஏனைய அணிகளை குறைத்து மதிப்பிட முடியாது." என்றும் அவர் கூறியுள்ளார். (ங)

# லீமன் கிடைத்தது மகிழ்ச்சி

“ மிக்கி ஆர்தருக்குப் பதிலாக ஆஸ்திரேலிய அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக டெரன் லீமன் வந்ததால் மகிழ்ச்சியில் இருக்கிறார் வொட்சன்.



ஆஸ்திரேலிய அணியின் புதிய பயிற்றுவிப்பாளரான டெரன் லீமனின் கீழ் மகிழ்ச்சியாக பணியாற்ற முடிவதாக அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷேன் வாட்சன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் சில செயற்பாடுகளையும் அவர் விமர்சித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய விதத்தில் ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட மிக்கி ஆர்தருக்குப் பதிலாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷேன் வாட்சன், "கிரிக்கெட்டை மகிழ்ச்சியாக விளையாடுவதற்குரிய வழிவகைகளை டெரன் லீமன் ஏற்படுத்தியுள்ளார். டெரன் லீமனின் கீழ் வீரர்கள் தங்களுக்கு விரும்பிய விதத்தில் தங்களை வெளிப்படுத்த ஏற்பாடுகள் காணப்படுகின்றது - என்றார்.

இந்த வருடம் இந்தியாவில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரின்போது 2ஆவது போட்டியின் பின்னர் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலைப் பின்பற்றாததன் காரணமாக ஷேன் வொட்சன், மிற்சல் ஜோன்சன், ஜேம்ஸ் பற்றின்சன், உஸ்மான் கவாஜா ஆகியோர் 3ஆவது போட்டியில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடை முடிவு தவறானது எனக் குறிப்பிட்ட ஷேன் வொற்சன், இந்தத் தடை தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# 'கொன்றுவிடுவேன் உன்னை' தாயை மிரட்டினாரா கோனி?



**"எனது உயிருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்தால் அதற்கு கோனியே முழு பொறுப்பு." - கோனியின் தாய்**

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் கோனி தனது தாயாரை மிரட்டுவதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 29 வயதான கோனி இந்திய அணி சார்பில் இது வரை 2 ஒருநாள் போட்டி களில் விளையாடி உள்ளார். ஐ.பி.எல்லில் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார்.

70 வயதான இவரது தாய் மோகிந்தர் கவுர் சொத்துக்காக தன்னை கோனி மிரட்டுகிறார் என்று பொலிஸில் புகார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பொஸிசில், மோகிந்தர் கவுர் கூறுகையில், "எனது உயிருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்தால் அதற்கு கோனியே முழு பொறுப்பு. மொஹாலியில் உள்ள சொத்துக்காக கோ்னி, அவரது மனைவி அமன்தீப் கவுர், சகோதரர் மன்மோகன் சிங் ஆகியோரது விருப்பத்தின் பேரில் என்னை கொலை செய்ய போவதாக மிரட்டினார்.

இந்த சட்டவிரோத செயலுக்கு கோனியின் தந்தையும், எனது கணவருமான சர்வான் சிங் உதவி புரிந்தார். சொத்துக்களை கோனியிடம் ஒப்படைக்குமாறு தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறேன். எனக்கு நீதி வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

எனினும் இது குறித்து கோனி கூறுகையில், "ஆறு ஆண்டுகளுக்கு முன், எனது குடும்பத்தை விட்டு பிரிந்து தனியாக வாழ்கிறேன். குடும்ப உறுப்பினர்கள் எவருடனும் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை. சொத்துக்காக எனது அம்மாவை கொல்வேன் என்று ஒருபோதும் மிரட்டியது கிடையாது" என தாயாரின் முறைப்பாட்டை மறுத்துள்ளார். (ங)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் சந்தி, இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
சி.தருமராசா T.P:0777894418
கண்ணன் T.P:00447539074503
(38828) (10,16)

**வாகனம் விற்பனைக்கு**

ஆங்கில இலக்கமுடைய ஹைஏஸ் வாகனம் மற்றும் உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0770377724
0779208683
(சி/10166) (10,16)

**காணி விற்பனைக்குண்டு**

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் இருந்து 150 மீற்றர் தொலைவில், பரந்தன் வீதியில், 8 பரப்பு வீடு இருந்த காணி விற்பனைக்குண்டு. (கோயில் குடியிருப்புக்கு முன்னால்)

விவரங்களுக்கு:
0772897851
(38821) (10,16)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரம்

பிட்டியம்பதி ஸ்ரீ காவிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய

'அம்பாள் அமுதம்' மண்டபத் திறப்பு விழா

சிவலைப்பிட்டி சனசமூக நிலைய அன்னதான சபையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'அம்பாள் அமுதம்' மண்டபம் நாளை (02.07.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி சுபவேளையில் மங்கலகரமாக திறந்து வைக்கப்படும்.

புங்குடுதீவு- 04.

இவ்விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவலைப்பிட்டி சனசமூக நிலைய அன்னதான சபையினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.